ISSN: 2582-5518




# புதுகை வரலாறு நாளிதழ்

WWW.VARALARUU.COM VARALARUU PUDUGAIVARALARU VARALARUU 7502051351




வெள்ளி ❖ பிப்ரவரி. 16, 2024 | சென்னை & புதுக்கோட்டை | 6 பக்கம் ❖ வரலாறு 9 ❖ இதழ் 129 ❖ ரூ.10

## தேர்தல் பத்திரம் சட்டவிரோதமானது உச்ச நீதிமன்றம் தீர்ப்பு

# அப்பப்பா

## 2022 வரை தேர்தல் பத்திரம் மூலம் அரசியல் கட்சிகள் ரூ.16,000 கோடியை பெற்றதாக தேர்தல் ஆணையம் தெரிவித்துள்ளது

புதுடெல்லி , பிப். 16–

2022 வரை தேர்தல் பத்திரம் மூலம் அரசியல் கட்சிகள் ரூ.16,000 கோடியை பெற்றதாக தேர்தல் ஆணையம் தெரிவித்துள்ளது. தேர்தல் பத்திரம் சட்டவிரோதமானது என்றும், வங்கிகள் அவற்றை விற்பனை செய்ய தடை விதிப்பதாகவும் உச்ச நீதிமன்றம் நேற்று தீர்ப்பளித்துள்ள நிலையில், 2016 முதல் 2022 வரை ரூ.16,000 கோடி அளவில் தேர்தல் பத்திரம் மூலம் அரசியல் கட்சிகள் பெற்றுள்ளதாக இந்திய தேர்தல் ஆணையம் தெரிவித்துள்ளது. தேர்தல் ஆணையம் வெளியிட்டுள்ள தகவல்களின்படி, 2016–2022 வரை 28 ஆயிரத்து 30 தேர்தல் பத்திரங்கள் விற்பனை செய்யப்பட்டுள்ளன. இவற்றின் மொத்த மதிப்பு ரூ.16,437.63 கோடி.



தேர்தல் பத்திரங்கள் மூலம் அதிக வருவாயை ஈட்டிய கட்சியாக பாஜக உள்ளது. இந்த கட்சி இந்த காலகட்டத்தில் ரூ.10,122 கோடியை ஈட்டியுள்ளது. தேர்தல் பத்திரம் மூலம் கட்சிகள் பெற்ற மொத்த தொகையில் இது ஏறக்குறைய 60 சதவீதமாகும். இரண்டாவது இடத்தில் காங்கிரஸ் கட்சி உள்ளது. இந்தக் கட்சி இந்த காலகட்டத்தில் ரூ.1,547 கோடியை தேர்தல் பத்திரங்கள் மூலம் பெற்றுள்ளது. இது மொத்த தொகையில் சுமார் 10 சதவீதமாகும். மூன்றாம் இடம் பிடித்துள்ள திரிணமூல் காங்கிரஸ் ரூ.823 கோடியை தேர்தல் பத்திரங்கள் மூலம் பெற்றுள்ளது.

ரூ.367 கோடியுடன் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி 4-ம் இடத்திலும், ரூ.231 கோடியுடன் தேசியவாத காங்கிரஸ் கட்சி 5-ம் இடத்திலும், ரூ.85 கோடியுடன் பகுஜன் சமாஜ் கட்சி 6-ம் இடத்திலும், ரூ.13 கோடியுடன் இந்திய கம்யூனிஸ்ட் கட்சி 7-ம் இடத்திலும் உள்ளன.

உச்ச நீதிமன்ற உத்தரவு என்ன கூறுகிறது? – 'தேர்தல் பத்திரம் முறை மக்களின் அடிப்படை உரிமைகளை மீறுவதாக உள்ளது. தேர்தல் பத்திரம் நன்கொடைக்காக கம்பெனிகள் சட்டத்தில் திருத்தம் மேற்கொண்டது சட்டவிரோதம். தற்போதைய விதிகளின்கீழ் தேர்தல் பத்திரம் முறை சட்டவிரோதமாக உள்ளது. தகவல் அறியும் உரிமை சட்டம் மற்றும் அரசியல் சாசன பிரிவு 19(1) ஆகியவற்றை மீறும் வகையில் தேர்தல் பத்திர முறை உள்ளது.

தேர்தல் பத்திரம் முறை திட்டத்தில் வெளிப்படைத் தன்மை இல்லை என்றால், அதனை ரத்து செய்யலாம். கார்ப்பரேட் நிறுவனங்கள் கட்சிகளுக்கு நிதி தரும்போது அதற்கு கைமாறு எதிர்பார்க்க வாய்ப்பு உள்ளது. கருப்புப் பணத்தை கட்டுப்படுத்தும் நோக்கத்தை அடைய தேர்தல் பத்திரங்களைத் தவிர வேறு வழிகள் உள்ளன.

அரசிடம் கணக்கு கேட்கும் உரிமை நாட்டு மக்களுக்கு உள்ளது என்பதை பல தருணங்களில் நீதிமன்றங்கள் சொல்லியுள்ளன. நன்கொடை தருவோர் குறித்த விவரங்களை தெரிவிக்கத் தேவையில்லை என்பது வாக்காளர்களின் உரிமைகளைப் பறிப்பதாக உள்ளது. எனவே, தேர்தல் நன்கொடை அளிக்க வகை செய்த வருமான வரி திருத்தச் சட்டம், மக்கள் பிரதிநிதித்துவ திருத்தச் சட்டம் ஆகியவை ரத்து செய்யப்படுகின்றன. தேர்தல் பத்திரம் முறை தொடர்பான மற்ற சட்டத் திருத்த மசோதாக்களும் ரத்து செய்யப்படுகின்றன. தேர்தல் பத்திரம் சட்டம் மட்டுமின்றி, கம்பெனி சட்டத்திருத்த மசோதாவும் ரத்து செய்யப்படுகிறது.

தேர்தல் பத்திரம் நிதி விவரங்களை வழங்காமல் இருப்பதற்கு உரிய காரணம் தெரிவிக்கப்படவில்லை. 2019-ம் ஆண்டு முதல் தேர்தல் பத்திரங்கள் மூலம் நன்கொடை அளித்தோர் விவரங்களை எஸ்பிஐ வங்கி வெளியிட வேண்டும். தேர்தல் பத்திரங்கள் மூலம் வழங்கப்பட்ட அனைத்து பங்களிப்பின் விவரங்களை மார்ச் 6-க்குள் வழங்க வேண்டும். அதேபோல், நன்கொடை கொடுத்தோர் குறித்த விவரங்களை தேர்தல் ஆணைய இணையதளத்தில் ஏப்ரல் 13-ம் தேதிக்குள் வெளியிட வேண்டும்" என்று உச்ச நீதிமன்றம் தனது தீர்ப்பில் தெரிவித்துள்ளது.

வழக்கின் பின்னணி: கடந்த 2017-18-ம் ஆண்டு மத்திய பட்ஜெட்டில் தேர்தல் பத்திரம் திட்டம் அறிவிக்கப்பட்டது. இந்த திட்டம் கடந்த 2018-ம் ஆண்டில் அமலுக்கு வந்தது. இதன்படி பாரத ஸ்டேட் வங்கியின் சார்பில் ரூ.1,000, ரூ.10,000, ரூ.1 லட்சம், ரூ.10 லட்சம், ரூ.1 கோடி மதிப்பில் தேர்தல் பத்திரங்கள் வெளியிடப்பட்டன. ஜனவரி, ஏப்ரல், ஜூலை, அக்டோபர் மாதங்களில் ஸ்டேட் வங்கியின் குறிப்பிட்ட வங்கி கிளைகளில் தேர்தல் பத்திரங்கள் விற்பனை செய்யப்படும். பொதுவாக ஒரு மாதத்தில் 10 நாட்களுக்கு மட்டுமே தேர்தல் பத்திரங்கள் வழங்கப்படும். எனினும் தேர்தல் காலத்தில் மட்டும் ஒரு மாதத்தில் 30 நாட்கள் பத்திரங்கள் விற்பனை செய்யப்படும்.

தனி நபர்கள், நிறுவனங்கள் தேர்தல் பத்திரங்களை வாங்கி தங்களுக்கு விருப்பமான அரசியல் கட்சிகளுக்கு நன்கொடையாக வழங்கலாம். ஒரு நபர், நிறுவனம் எத்தனை பத்திரங்களை வேண்டுமானாலும் வாங்கலாம். இந்த பத்திரங்களில் வாங்குபவரின் பெயர், முகவரி உள்ளிட்ட விவரங்கள் இருக்காது. 15 நாட்களுக்குள் பத்திரத்தை பணமாக மாற்ற வேண்டும். இல்லையெனில் தேர்தல் பத்திரங்களின் தொகை பிரதமர் நிவாரண நிதியில் டெபாசிட் செய்யப்படும். தேர்தல் பத்திரம் திட்டத்தில் வெளிப்படைத்தன்மை இல்லை என்று எதிர்க்கட்சிகள் குற்றம் சாட்டிவருகின்றன.

இந்த திட்டத்தை ரத்து செய்யக் கோரி ஏடிஆர், காமன் கேஸ் உள்ளிட்ட தன்னார்வ தொண்டு நிறுவனங்கள் மற்றும் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி சார்பில் உச்ச நீதிமன்றத்தில் 4 மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டன. இந்த மனுக்களை உச்ச நீதிமன்றம் விசாரணைக்கு ஏற்றுக் கொண்டது. கடந்த 6 ஆண்டுகளாக விசாரணை நீடித்தது. கடந்த ஆண்டு முதல் தலைமை நீதிபதி சந்திரசூட், நீதிபதிகள் சஞ்சீவ் கன்னா, பர்திவாலா, மனோஜ் மிஸ்ரா அடங்கிய அமர்வு வழக்கை விசாரித்து வந்தது குறிப்பிடத்தக்கது.

## "நாங்களும் பாஜகவை எதிர்க்கிறோம் என முதல்வர் ஸ்டாலினே ஒப்புக்கொண்டார்" – இபிஎஸ்

சென்னை, பிப். 16–

பாஜகவுக்கு எதிராக பேசிவருவதற்கு முதல்வர் ஸ்டாலின் வரவேற்பு தெரிவித்தது குறித்து கூறும்போது, "பரவாயில்லை. இதுநாள் வரை அடிமை என்று பேசிய முதல்வரே நாங்களும் எதிர்க்கிறோம் என்பதை ஒத்துக்கொண்டார்" என்று சட்டப்பேரவை முடிந்த பின் பேட்டியளித்த அதிமுக பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமி தெரிவித்துள்ளார்.



சட்டப்பேரவை வளாகத்தில் செய்தியாளர்களைச் சந்தித்த பழனிசாமி மேலும் பேசுகையில், "ஆளுநர் உரை மீது அதிமுக எழுப்பிய கேள்விகளுக்கு முதல்வரின் பதிலுரையில் எந்தப் பதிலும் கிடைக்கவில்லை. ஆளுநர் உரை மீது நேற்று முன்தினம் புதன்கிழமை நான் பேசிக்கொண்டிருந்தபோது இடையில் குறுக்கிட்டு அமைச்சர் மா.சுப்பிரமணியன், நான் முதல்வராக இருக்கும் அதிமுக ஆட்சியில் ஆரம்ப சுகாதார நிலையங்கள் திறக்கவில்லை என்று குற்றம் சாட்டினார். அமைச்சர் சொன்னது உண்மைக்கு புறம்பானது.

ஆனால், 42 புதிய ஆரம்ப சுகாதார நிலையங்கள் எனது ஆட்சியில் திறக்கப்பட்டுள்ளது. திமுக ஆட்சி அமைந்து 33 மாதங்கள் ஆகிவிட்டது. இந்தக் காலகட்டத்தில் பல்வேறு புதிய திட்டங்கள் அறிவிக்கப்பட்டது. அதேபோல் பல பிரச்சினைகள் நடந்தன. பிரச்சினைகள் ஏற்படும்போது சரி, திட்டங்கள் அறிவிக்கப்படும்போது சரி அதெற்கென குழு அமைக்கப்பட்டது. அப்படியாக இதுவரை 52 குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளதாக எனக்கு தகவல் கிடைத்துள்ளன.

இந்த ஆட்சி பொறுப்பேற்ற பிறகு எத்தனை குழுக்கள் அமைக்கப்பட்டு, அவற்றில் எந்தக் குழுக்கள் முழுமையாக அறிக்கை தாக்கல் செய்துள்ளன. அறிக்கையின் பேரில் எடுக்கப்பட்ட விவரங்கள் குறித்த வெள்ளை அறிக்கையை தாக்கல் செய்ய வேண்டும் என்றோம். அதற்கும் முதல்வரின் பதிலுரையில் எந்த தகவலும் சொல்லப்படவில்லை. இப்படி, உலக முதலீட்டாளர்கள் மாநாடு, நிக்ஜாம் புயல், நான் முதல்வன் திட்டம், தென் மாவட்ட கனமழை என எது குறித்து கேட்டாலும் பதிலுரையில் எந்த தகவலும் சொல்லப்படவில்லை

கர்நாடகாவில் இருந்து காவிரியில் முறையாக தண்ணீர் பெறாததால் குறுவை சாகுபடி பாதிக்கப்பட்டுள்ளது. குறுவை சாகுபடியில் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு பயிர் காப்பீடுத்தொகை கிடைக்கவில்லை. அத்தியாவசிய பொருட்களின் உயர்வு தொடர்பாக கேட்டதற்கு பதில் இல்லை.

திமுக தேர்தல் அறிக்கையில் 520 அறிவிப்புகள் வெளியிட்டது. இவற்றில் 10% மட்டுமே நிறைவேற்றப்பட்டுள்ளது. ஆனால் எங்கு சென்றாலும் 95% தேர்தல் வாக்குறுதிகள் நிறைவேற்றப்பட்டதாக முதல்வர் ஸ்டாலினும், அமைச்சர்களும் பேசிவருகிறார்கள். அதிலும் குறிப்பாக, நீட் தேர்வை ரத்து செய்வதற்கான ரகசியத்தை திமுக இதுவரை கண்டுபிடிக்கவில்லை. இனியாவது உதயநிதி ஸ்டாலின் இதை கண்டுபிடிப்பார் என எதிர்ப்பார்க்கிறோம். படிக்காதவர்களையும், படித்தவர்களையும் ஏமாற்றுகிற அரசு திமுக அரசுதான்.

சட்டமன்றத்தில் நான் பேசுவதை நேரலையில் ஒளிபரப்புவதில்லை. சென்னையில் மாற்றுத்திறனாளிகள் கைது குறித்தும் முதல்வரின் கவனத்துக்கு கொண்டுசென்றேன். ஆனால், அமைச்சர் எழுந்து இதற்கு பதில் சொல்வதற்கு பதில் ஏதேதோ சொல்லி கைவிட்டுவிட்டார். பார்வையற்ற மாற்றுத்திறனாளிகள் கோரிக்கைகளை தமிழக அரசு நிறைவேற்ற வேண்டும்.

திமுக ஆட்சி அமைந்த பிறகு என்ன திட்டங்களை கொண்டுவந்திருக்கிறார்கள் என்று சொல்ல முடியுமா? அதிமுக ஆட்சியில் மக்களை கடனாளியாக்கிவிட்டது என்று திமுக குற்றம் சாட்டியது. அதுவே திமுக ஆட்சி அமைந்த இந்த 33 மாதங்களில் ரூ.2,47,000 கோடி வாங்கியிருக்கிறார்கள். எனினும் எந்த புதிய திட்டமும் கொண்டுவரவில்லை. மக்கள் எந்த பயனும் பெறவில்லை. அதிமுக ஆட்சியில் கொண்டுவந்த திட்டங்களை முடக்கினார்கள்.

அதிமுக ஆட்சியில் 50 ஆண்டுகளாக தீர்க்க முடியாத காவிரி நதி நீர் பிரச்சினையை சட்ட போராட்டம் நடத்தி தீர்ப்பை பெற்றோம். தீர்ப்பு பெற்றாலும் நடைமுறைப்படுத்த காலதாமதம் ஆனது. அப்போது கூட்டணியில் அதிமுக இருந்தாலும் எங்களது எம்பிக்கள் 37 பேர் மூலம் தொடர்ந்து 22 நாட்கள் நாடாளுமன்றத்தை ஒத்திவைத்து வரலாறு படைத்தது. இதுமாதிரி ஏதேனும் ஒன்றாவது திமுக செய்ததா?

மத்திய அரசிடம் இருந்து நிதி வரவில்லைதானே. அப்படியானால் கேட்க வேண்டிய இடத்தில் கேட்டால்தான் நிதி வாங்க முடியும். உங்களுக்குதான் 39 எம்பிக்கள் உள்ளனர். எங்களிடம் இருந்த ஒரு நாடாளுமன்ற உறுப்பினரும் ஓடிவிட்டார். காவிரி விவகாரத்தில் திமுக ஏன் இவ்வளவு மெத்தனமாக இருக்கிறது என்று தெரியவில்லை.

இந்தியா கூட்டணியில் வேறு இருக்கிறீர்கள். கூட்டணி கட்சிகள் சேர்ந்து மாநில அரசுக்கு கிடைக்க வேண்டிய நிதிக்கு எத்தனை முறை திமுக குரல் கொடுத்தது என்று சொல்ல முடியுமா" என்றார் இபிஎஸ்.

தொடர்ந்து உங்களுக்கு முதல்வர் அழைப்பு விடுத்தாரே என்ற செய்தியாளர்களின் கேள்விக்கு பதிலளித்த இபிஎஸ், "யாருக்கு இந்த அரசை கொடுத்தார்கள். உங்களுக்கு (திமுகவுக்கு) தான் அரசை கொடுத்தார்கள். அப்போது அவர்கள் தான் செய்ய வேண்டும்" என்றார்.

பாஜகவுக்கு எதிராக பேசத் தொடங்கியதுக்கு முதல்வர் ஸ்டாலின் வரவேற்பு தெரிவித்தது குறித்து கூறும்போது, "பரவாயில்லை. இதுநாள் வரை அடிமை என்று பேசிய முதல்வரே இன்று நாங்களும் எதிர்க்கிறோம் என்பதை ஒத்துக்கொண்டார். அதிமுக பொறுத்தவரை கூட்டணியில் இருந்தாலும், இல்லாவிட்டாலும் தமிழக மக்களுக்கு சாதமாக இருந்தால் ஆதரிப்போம். தமிழ்நாட்டு மக்கள்தான் எங்களின் எஜமானர்கள்" என்று தெரிவித்தார்.

அதேபோல் தேர்தல் பத்திரம் குறித்து உச்ச நீதிமன்ற தீர்ப்பு குறித்து பேசியவர், "இங்கிருக்கும் திமுக கூடதான் நன்கொடை வாங்கியுள்ளது. வாங்காத ஒரே கட்சி அதிமுகதான். நன்கொடை வாங்கியவர்கள் பதில் சொல்ல வேண்டும். இந்த திட்டங்களுக்கு இதுபோன்று தடை விதித்தால் தான் எங்களை போன்றவர்கள் கட்சி நடத்த முடியும். அதிமுக இந்த தீர்ப்பை வரவேற்கிறது" என்றார்.

## தேர்தல் பாதுகாப்புக்கு 3.40 லட்சம் மத்திய படையினர் தேவை மத்திய அரசுக்கு தேர்தல் ஆணையம் கோரிக்கை

புதுடெல்லி : பிப். 16–

மக்களவைத் தேர்தல் மற்றும் அதனோடு சேர்ந்து நடைபெற உள்ள சில சட்டமன்றங்களின் தேர்தல் பாதுகாப்புக்கு 3.40 லட்சம் மத்திய பாதுகாப்புப் படையினரை பணியமர்த்த மத்திய அரசுக்கு தேர்தல் ஆணையம் கோரிக்கை விடுத்துள்ளது.




மக்களவைத் தேர்தலும், ஆந்திரப் பிரதேசம், அருணாச்சலப் பிரதேசம், ஒடிசா, சிக்கிம் ஆகிய மாநிலங்களுக்கான சட்டப்பேரவைத் தேர்தலும் வரும் ஏப்ரல், மே மாதங்களில் நடைபெறும் என எதிர்பார்க்கப்படுகிறது. தேர்தல் ஏற்பாடுகளை தேர்தல் ஆணையம் தீவிரமாக மேற்கொண்டு வருகிறது. இந்நிலையில், மக்களவை மற்றும் சட்டமன்றங்களுக்கான தேர்தல் பாதுகாப்புக்கு தேவைப்படும் பாதுகாப்பு தொடர்பாக தேர்தல் ஆணையம், மத்திய உள்துறை அமைச்சகத்துக்கு கடிதம் எழுதியுள்ளது. அதில், "மொத்தம் 3,400 கம்பெனி துணை ராணுவப் படையினர், அதாவது 3.40 லட்சம் துணை ராணுவப் படையினர் தேர்தல் பாதுகாப்புக்குத் தேவை.

மேற்கு வங்கத்துக்கு 920 கம்பெனி துணை ராணுவப்படையினர், ஜம்மு காஷ்மீருக்கு 635 கம்பெனி துணை ராணுவப்படையினர், சத்தீஸ்கருக்கு 360 கம்பெனி துணை ராணுவப்படையினர், பிஹாருக்கு 295 கம்பெனி துணை ராணுவப்படையினர், உத்தரப் பிரதேசத்துக்கு 252 கம்பெனி துணை ராணுவப் படையினர் தேவை.

இதேபோல், ஆந்திரப் பிரதேசம், ஜார்க்கண்ட் மற்றும் பஞ்சாபுக்கு தலா 250, தமிழ்நாடு, ராஜஸ்தான், குஜராத், மணிப்பூருக்கு தலா 200 துணை ராணுவப்படையினரை அனுப்ப வேண்டும். ஒடிசாவுக்கு 175 கம்பெனி துணை ராணுவப்படையினரும், அஸ்ஸாம் மற்றும் தெலங்கானாவுக்கு 160 துணை ராணுவப்படையினரும் தேவை.

மகாராஷ்டிராவுக்கு 150, மத்தியப் பிரதேசத்துக்கு 113, திரிபுராவுக்கு 100, ஹரியானாவுக்கு 95, அருணாச்சலப் பிரதேசத்துக்கு 75, கர்நாடகா, உத்தராகண்ட், டெல்லிக்கு தலா 70 கம்பெனி துணை ராணுவப்படையினரை பாதுகாப்புக்காக அனுப்ப வேண்டும். கேரளாவுக்கு 66, லடாக்குக்கு 57, இமாச்சலப் பிரதேசத்துக்கு 55, நாகாலாந்துக்கு 48, மேகாலயாவுக்கு 45, சிக்கிமுக்கு 17, மிசோரமுக்கு 15, தாத்ரா நாகர் ஹவேலிக்கு 14, கோவாவுக்கு 12, சண்டிகருக்கு 11, புதுச்சேரிக்கு 10, அந்தமான் நிகோபாருக்கு 5, லட்சத்தீவுக்கு 3 கம்பெனி துணை ராணுவப்படையினரை தேர்தல் பாதுகாப்புக்காக அனுப்ப வேண்டும்" என்று தேர்தல் ஆணையம் மத்திய உள்துறை அமைச்சகத்துக்கு எழுதியுள்ள கடிதத்தில் கோரியுள்ளது.

அனைத்து மாநில மற்றும் யூனியன் பிரதேச தலைமை தேர்தல் அதிகாரிகள், நிலைமையை ஆராய்ந்து தேர்தல் ஆணையத்துக்கு அனுப்பிய கடிதத்தின் அடிப்படையில், தேர்தல் ஆணையம் உள்துறை அமைச்சகத்துக்கு இந்த கடிதத்தை அனுப்பியுள்ளது. துணை ராணுவப் படையினரின் இருப்பை கருத்தில் கொண்டு, தேர்தல் ஆணையத்தின் இந்த கோரிக்கை மீது மத்திய உள்துறை அமைச்சகம் முடிவெடுக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

## முதல்வர் ஸ்டாலின் வீட்டின் அருகே பயங்கரம் மாமூல் கேட்டு பிரியாணி கடையைச் சூறையாடிய ரவுடிகள்

சென்னை : பிப். 16–

தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் வீட்டருகே மாமூல் கேட்டு பாஸ்ட் புட் கடையை ரவுடிகள் சூறையாடிய சம்பவம் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.



சென்னை தேனாம்பேட்டை பகுதியைச் சேர்ந்தவர் ஜிம் பயிற்சியாளர் சதீஷ். இவர் தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் வசிக்கும் ஆழ்வார்ப்பேட்டை டிடிகே சாலையில் ஒன்றறை ஆண்டுகளாக பிரியாணி மற்றும் பாஸ்ட் ஃபுட் கடை நடத்தி வருகிறார். இவரது கடைக்கு தினமும் வேளச்சேரியை சேர்ந்த ஆட்டோ ஓட்டுநர் மணி என்ற ரவுடி பாட்டில் மணி என்பவர் வந்து ஓசியில் பிரியாணி மற்றும் மாமூல் கேட்டு மிரட்டி சென்றதாக கூறப்படுகிறது.

இதே போல கடந்த 11-ம் தேதி பாட்டில் மணி, பிரியாணி கடையில் மாமூல் கேட்டு மிரட்டி தகராறில் ஈடுபட்டதால் பரபரப்பு ஏற்பட்டது. இதையடுத்து சதீஷ் இது தொடர்பாக தேனாம்பேட்டை காவல் நிலையத்தில் புகார் அளித்தார். ஆனால் போலீஸார் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை என கூறப்படுகிறது. இந்நிலையில் காவல் நிலையத்தில் புகார் அளித்ததை தெரிந்து கொண்ட ரவுடி பாட்டில் மணி தனது கூட்டாளிகளுடன் நேற்று முன்தினம் புதன்கிழமை இரவு பிரியாணி கடைக்குச் சென்று உரிமையாளர் சதீஷுக்கு கொலை மிரட்டல் விடுத்துள்ளார்.

அத்துடன் தனது கூட்டாளிகளுடன் சேர்ந்து பிரியாணி கடையை சூறையாடியதுடன் கடையில் இருந்த 20 ஆயிரம் ரூபாயை எடுத்துக் கொண்டு ஆட்டோவில் பாட்டில் மணி தப்பிச் சென்றார். இதனைக் கடை ஊழியர்கள் செல்போனில் வீடியோவாக பதிவு செய்தனர். இது தொடர்பாக பிரியாணி கடை உரிமையாளர் சதீஷ் வீடியோ ஒன்றை பதிவு செய்து சமூக வலைதளத்தில் வெளியிட்டுள்ளார். அதில், முதல்வர் வீட்டருகே கடை நடத்தி வரும் நிலையில் ரவுடிகள் மாமூல் கேட்டு மிரட்டி வருகிறார்கள்.

இதுகுறித்து காவல் நிலையத்தில் புகார் அளித்தேன், விஷயம் தெரிந்து ஆட்களுடன் கடைக்கு வந்த ரவுடி மணி கடையை சூறையாடி விட்டு கொலை மிரட்டல் விடுத்துச் சென்றதாக வேதனையோடு தெரிவித்துள்ளார். இதையடுத்து தேனாம்பேட்டை போலீஸார் இந்த சம்பவம் குறித்து தீவிர விசாரணை நடத்தி வருகின்றனர். முதல்வர் வீட்டின் அருகே நடைபெற்ற இந்த சம்பவம் அப்பகுதி மக்களிடையே பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

## பாஜக அரசு என்பது பொய்க்கும் அநீதிக்கும் உத்தரவாதம், நாட்டின் கனவுகளுக்கு காங்கிரஸ் நீதி வழங்கும் : ராகுல் காந்தி பதிவு

டெல்லி : பிப். 16–

பாஜக அரசு என்பது பொய்க்கும் அநீதிக்கும் உத்தரவாதம், நாட்டின் கனவுகளுக்கு காங்கிரஸ் நீதி வழங்கும் என காங்கிரஸ் எம்.பி. ராகுல் காந்தி தெரிவித்துள்ளார்.



இது தொடர்பாக எக்ஸ் தளத்தில் பதிவிட்டுள்ள அவர்; மோடி அவர்களே, 'புதிய உத்தரவாதங்களுக்கு' முன், 'பழைய உத்தரவாதங்களை' கணக்கிடுங்கள். ஒவ்வொரு ஆண்டும் 2 கோடி வேலைகள் உத்தரவாதம் பொய், விவசாயிகளின் வருமானத்தை இரட்டிப்பாக்க உத்தரவாதம் பொய், கறுப்புப் பணத்தை மீட்பதற்கான உத்தரவாதம் பொய், பணவீக்கத்தை குறைக்க உத்தரவாதம் தவறானது.

ஒவ்வொரு கணக்கிலும் ரூ. 15 லட்சம் உத்தரவாதம் பொய், பெண்களின் பாதுகாப்பு மற்றும் கண்ணியத்திற்கு உத்தரவாதம் பொய், 100 ஸ்மார்ட் நகரங்களை உருவாக்குவதற்கான உத்தரவாதம் தவறானது, ரூபாயை வலுப்படுத்த உத்தரவாதம் பொய், சீனாவை சிவப்புக் கண் காட்டுவது உத்தரவாதம் பொய், நான் சாப்பிடமாட்டேன் அல்லது யாரையும் சாப்பிட அனுமதிக்க மாட்டேன் என்று உத்தரவாதம் பொய், கடந்த 10 வருடங்களாக பொய்யான கனவுகளின் நுண்ணோக்கியுடன் சுற்றித் திரியும் பிரதமர் நாட்டில் மோசடித் தொழிலை நடத்துகிறார். பாஜக அரசு என்பது பொய்க்கும் அநீதிக்கும் உத்தரவாதம், நாட்டின் கனவுகளுக்கு காங்கிரஸ் நீதி வழங்கும் என்று குறிப்பிட்டுள்ளார்.

# இன்று




## சிந்திப்போம்.... செயல்படுவோம்







# கறம்பக்குடி அருகே விசிக ஆர்ப்பாட்டத்தில் பெட்ரோல் குண்டு வீச்சு: சாலைமறியலால் பரபரப்பு



கறம்பக்குடி : பிப். 16–

கறம்பக்குடி அருகே மழையூரில் நடைபெற்ற விசிக ஆர்ப்பாட்டத்தில் பெட்ரோல் குண்டு வீசப்பட்டதில் மாவட்ட செயலாளர் காயத்துடன் உயிர் தப்பினார். குற்றவாளிகளை கைது செய்யக்கோரி சாலைமறியல் நடைபெற்றதால் பதற்றமான சூழல் ஏற்பட்டது.

புதுக்கோட்டை மாவட்டம், கறம்பக்குடி தாலுகா, மழையூர் அரசு மேல்நிலைப் பள்ளியில் பயின்று வரும் பட்டியலின சமூகத்தை சேர்ந்த பள்ளி மாணவனை மாற்று சமூகத்தினரால் கடந்த சில நாட்களுக்கு முன்பு தாக்கப்பட்டுள்ளார். தாக்குதல் நடத்திய மாற்று சமூகத்தை சேர்ந்த குற்றவாளிகளை கைது செய்யக்கோரியும், மழையூர் அரசு மருத்துவமனையில் சாலை வசதி, ஸ்கேன் வசதி மற்றும் எக்ஸ்ரே வசதி செய்து தரக்கோரி விடுதலை சிறுத்தைகள் கட்சி சார்பில் கண்டன ஆர்ப்பாட்டம் மழையூர் பேருந்து நிறுத்தம் அருகே செவ்வாய்கிழமை மாலை நடைபெற்றது.

இந்த ஆர்ப்பாட்டத்தின் போது மர்ம நபர்கள் ஒலிபெருக்கியின் ஒயர்களை துண்டித்ததாக கூறப்படுகிறது. கண்டன ஆர்ப்பாட்டம் நிறைவு பெற்ற நிலையில் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்களை நோக்கி மர்ம நபர்கள் பெட்ரோல் குண்டு வீசி உள்ளனர். இந்த பெட்ரோல் குண்டு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டிருந்த விசிக மாவட்ட செயலாளர் இளமதி அசோகன் மீது விழுந்தது. இதில் மாவட்ட செயலாளர் இளமதி அசோகன் அணிந்திருந்த சேலையின் ஒரு பகுதியில் தீப்பிடித்து எறிந்தது. இதைக் கண்ட விசிகவினர் தீயினை அனைத்தனர்.

பெட்ரோல் குண்டு வீசிய மர்ம நபர்களை கைது செய்யக்கோரி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட விசிகவினர் மழையூர் பேருந்து நிறுத்தம் முன்பு புதுக்கோட்டை, கறம்பக்குடி சாலையில் மறியல் போராட்டத்தில் ஈடுபட்டனர். மேலும் தொடர்ச்சியாக புதுக்கோட்டை மாவட்டத்தில் தொடர்ந்து பட்டியலின மக்கள் தாக்கப்பட்டு வருவதாகவும், இந்த கண்டன ஆர்ப்பாட்டமானது காவல்துறை அனுமதி பெற்று நடைபெற்றதாகவும் மாவட்ட ஆட்சியர் சம்பவ இடத்திற்கு விரைந்து வந்து தங்களிடம் பேச்சுவார்த்தை நடத்தி குற்றவாளிகளை கைது செய்தால் மட்டுமே இங்கிருந்து கலைந்து செல்வோம் என்று தெரிவித்து தொடர் சாலை மறியலில் ஈடுபட்டனர். பேருந்து உள்ளிட்ட வாகனங்கள் மாற்று பாதையில் திருப்பிவிடபட்டன.

புதுக்கோட்டை வருவாய் கோட்டாட்சியர் ஐஸ்வர்யா மறியல் போராட்டத்தில் ஈடுபட்டவர்களிடம் பேச்சுவார்த்தை நடத்தினார். இதில் பெட்ரோல் குண்டு வீசிய மர்ம நபர்களை கண்டறிந்து உடனடியாக கைது செய்ய நடவடிக்கை எடுப்பதாக தெரிவித்தார். இதனை ஏற்று போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் சாலைமறியலை கைவிட்டு கலைந்து சென்றனர். நள்ளிரவு வரை நீடித்த சாலைமறியல் போராட்டத்தால் அந்த பகுதியில் பரபரப்பாக காணப்பட்டது. பெட்ரோல் குண்டு வீச்சில் காயமடைந்த விசிக மாவட்ட செயலாளர் இளமதி அசோகன் 108 ஆம்புலன்ஸ் மூலம் புதுக்கோட்டை அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக அனுப்பி வைக்கப்பட்டார். இது குறித்து வழக்கு பதிவு செய்த மழையூர் காவல்துறையினர் விசாரணை நடத்தி வருகின்றனர்.

# கீரனூரில் அரசு கலை அறிவியல் கல்லூரி அமைக்க உயர்கல்வித்துறை அமைச்சரிடம் எம்.சின்னதுரை எம்எல்ஏ கோரிக்கை



புதுக்கோட்டை : பிப். 16–

நடப்பு நிதியாண்டிலேயே புதுக்கோட்டை மாவட்டம், கீரனூரில் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி தொடங்க வேண்டுமென எம்.சின்னதுரை எம்எல்ஏ வலியுறுத்தி உள்ளார்.

கந்தர்வகோட்டை தொகுதி சட்டப்பேரவை உறுப்பினர் எம்.சின்னதுரை, புதுக்கோட்டை வடக்கு மாவட்ட திமுக செயலாளர் கே.கே. செல்லப்பாண்டியனுடன் இணைந்து, தமிழ்நாடு உயர்கல்வித்துறை அமைச்சர் ராஜ. கண்ணப்பனிடம் அளித்துள்ள கோரிக்கை மனுவில் தெரிவித்திருப்பதாவது:–

எனது கந்தர்வகோட்டை சட்டமன்றத் தொகுதிக்கு உட்பட்ட கீரனூர் பேரூராட்சியை சுற்று நூற்றுக்கும் மேற்பட்ட கிராமங்கள் உள்ளன. கீரனூர் பேரூராட்சி மற்றும் சுற்றுவாட்டராத்தில் உள்ள பல ஆயிரக்கணக்கான குடும்பங்கள் பொருளாதாரத்தில் மிகவும் பின்தங்கிய பகுதியினராக உள்ளனர். இப்பகுதியில் இருந்து ஆண்டுதோறும் ஆயிரக்கணக்கான மாணவர்கள் பன்னிரண்டாம் வகுப்பு தேர்ச்சி பெறுகின்றனர். இவர்கள் உயர்கல்விக்காக திருச்சி, புதுக்கோட்டைக்கு வெகுதூரம் பயணம் செய்ய வேண்டியுள்ளது. இதனால், பல பின்தங்கிய குடும்பத்து மாணவ, மாணவிகள் கல்லூரி படிப்பில் சேர முடியாத நிலை உள்ளது. குறிப்பாக, கிராமப்புற மாணவிகள் உயர்கல்வி பயில முடியாமல் பெரிதும் பாதிப்படைகின்றனர்.

கீரனூரில் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி அமைக்க வலியுறுத்தி இப்பகுதி மக்கள் நீண்டகாலமாக கோரிக்கை வைத்து வருகின்றனர். நானும் சட்டப்பேரவையில், இதுகுறித்த கோரிக்கையை தொடர்ந்து எழுப்பி வருகின்றேன். குன்றாண்டார்கோவில் ஊராட்சி ஒன்றியக்குழுவிலும் இங்கு கல்லூரி அமைக்க ஒருமனதாக தீர்மானம் நிறைவேற்றப்பட்டு அரசின் நடவடிக்கைக்காக அனுப்பப்பட்டுள்ளது. கீரனூர் அருகே கல்லூரி தொடங்குவதற்குத் தேவையான அரசுப் புறம்போக்கு நிலங்கள் அதிகளவு உள்ளன. எனவே, கிராமப்புற ஏழை, எளிய மாணவர்களின் நலன்களை கருத்தில் கொண்டும், அவர்கள் உயர் கல்வி பெறுவதற்கு ஏதுவாகவும் கீரனூரில் ஒரு அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரியை நடப்பு நிதியாண்டிலேயே தொடங்குவதற்கு தாங்கள் அவசர நடவடிக்கை எடுத்திட வேண்டும்என்று அந்தமனுவில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# ஸ்ரீவில்லிபுத்தூர் ஆண்டாள் கோவிலில் ஓ.பன்னீர்செல்வம் சாமி தரிசனம்



ஸ்ரீவில்லிபுத்தூர் : பிப். 16–

பாராளுமன்ற தேர்தலுக்கு தேசியக்கட்சிகள் கூட்டணி அமைப்பதில் தீவிரம் காட்டி வருகின்றன. அதேபோல் மாநிலக்கட்சிகளும் ஒத்த கருத்துடைய கட்சிகளுடன் கூட்டணி தொடர்பான பேச்சுவார்த்தையைமும்முரமாக நடத்தி வருகிறது. தமிழகத்தை பொறுத்தவரை 4 முனை போட்டி ஏற்பட வாய்ப்பு இருப்பதாக அரசியல் நோக்கர்கள் கருதுகிறார்கள்.

இந்த அரசியல் பரபரப்புகளுக்கு இடையே ஸ்ரீவில்லிபுத்தூர் ஆண்டாள் கோவிலில் முன்னாள் முதலமைச்சர் ஓ.பன்னீர்செல்வம் நேற்று சாமி தரிசனம் செய்தார். முன்னதாக அவர் நேற்று முன்தினம் புதன்கிழமை இரவு ராஜபாளையம் சென்று அங்குள்ள தனியார் தங்கும் விடுதியில் தங்கி இருந்து காலையில் ஸ்ரீவில்லிபுத்தூர் ஆண்டாள் கோவிலுக்கு கார் மூலம் வந்தார். அங்கு அவருக்கு அவரது ஆதரவாளர்கள் திரண்டு நின்று வரவேற்பு வழங்கினர். தொடர்ந்து அவர் ஆண்டாள் கோவிலின் அனைத்து சன்னதிகளுக்கும் சென்று சாமி தரிசனம் செய்தார்.

பின்னர் அவர் கார் மூலம் மேற்கு தொடர்ச்சி மலை செண்பகத்தோப்பு அடிவார பகுதியில் உள்ள அவரது குலதெய்வமான வனப்பேச்சி அம்மன் கோவிலுக்கு சென்று சுமார் இரண்டு மணி நேரம் இருந்துசிறப்புவழிபாடுசெய்தார். மேலும் அவரது குடும்பத்தின் சார்பில் வனப்பேச்சிக்கு சிறப்பு பூஜை, அபிஷேகம், ஆராதனைகள் நடைபெற்றது.

அரசியலில் எந்த ஒரு முடிவு எடுப்பது என்றாலும் ஓ.பன்னீர்செல்வம், ஸ்ரீவில்லிபுத்தூரில் உள்ள செண்பகத்தோப்பில் அமைந்திருக்கும் தனது குல தெய்வமான வனப்பேச்சி அம்மன் கோவிலுக்கு சென்று அனுமதி வாங்கிவிட்டு தான் முடிவு செய்வார். இந்த திடீர் வருகை குறித்து அவரது கட்சி நிர்வாகிகளிடம் கேட்டபோது, ஓ.பி.எஸ். சாமி தரிசனம் செய்ய மட்டுமே வந்துள்ளார். இதில் எந்த அரசியலும் கிடையாது என்று திட்டவட்டமாக கூறினர்.

# புதுக்கோட்டை வெங்கடேஸ்வரா பாலிடெக்னிக் கல்லூரியில் மாணவர்களுக்கான "வேலைவாய்ப்பு நேர்காணல்"



புதுக்கோட்டை : பிப். 16–

புதுக்கோட்டை வெங்கடேஸ்வரா பாலிடெக்னிக் கல்லூரியில் நோக்கியா நிறுவனத்திற்கு மாணவர்களுக்கான "வேலைவாய்ப்பு வளாக நேர்காணல்" கல்லூரியில் நடைபெற்றது.

கல்லூரியின் செயலாளர் பி.கருப்பையா தலைமை தாங்கினார். பொருளாளர் ஆர்.எம்.வீ.கதிரேசன் முன்னிலை வகித்தார். இதில் சென்னையை சேர்ந்த நோக்கியா நிறுவன மனிதவள மேலாளர் மகேஷ் கலந்து கொண்டு மாணவ, மாணவிகளுக்கு நேர்காணலை நடத்தினார். இந்த நேர்காணலில் கந்தர்வகோட்டை அரசு பாலிடெக்னிக் கல்லூரி, அறந்தாங்கி அரசு பாலிடெக்னிக் கல்லூரி, காரைக்குடி அண்ணாமலை பாலிடெக்னிக் கல்லூரி ஆகிய கல்லூரிகளில் இருந்து சுமார் 200–க்கும் மேற்பட்ட மாணவ, மாணவிகள் கலந்து கொண்டனர். நேர்காணலில் தேர்வு செய்யப்பட்ட 170 மாணவர்களுக்கு பணிநியமன ஆணையை உடனடியாக வழங்கி பாராட்டினர்.

நிகழ்ச்சியில் கல்லூரியின் செயலாளர் பி.கருப்பையா, கல்லூரியின் பொருளாளர் ஆர்.எம்.வீ.கதிரேசன், கல்லூரியின் முதல்வர் ஆர்.எம்.ஜீவானந்தம், துறை பேராசிரியர்கள் வாழ்த்துரை வழங்கினர். முன்னதாக கல்லூரியின் வேலைவாய்ப்பு அலுவலர் சரண்யா ராமன் வரவேற்புரை வழங்க, கல்லூரியின் துணை முதல்வர் திருமலை அரசன் நன்றி கூறினார்.

# ஹல்துவானியில் மதரஸாவை இடித்ததால் ஏற்பட்ட வன்முறையை தொடர்ந்து 7 நாட்களுக்குப் பிறகு வன்புல்புராவில் ஊரடங்கு தளர்வு



புதுடெல்லி : பிப். 16–


உத்தராகண்ட் மாநிலம், ஹல்துவானியில் சட்டவிரோதமாக கட்டப்பட்ட மதரஸாவைஇடித்ததால்ஏற்பட்ட வன்முறையை தொடர்ந்து வன்புல்புரா பகுதியில் விதிக்கப்பட்ட ஊரடங்கு கட்டுப்பாடுகள் தற்காலிகமாக தளர்த்தப்பட்டுள்ளன.

உத்தராகண்ட் மாநிலம் ஹல்துவானி நகரின் வன்புல்புரா பகுதியில் சட்டவிரோத ஆக்கிரமிப்புகளை அகற்றும் பணி நடைபெற்றது. இதில் கடந்த பிப்.8ஆம் தேதி முஸ்லிம்கள் அதிகம் வாழும் மல்லீக் தோட்டம் எனும் இடத்தில் சட்டவிரோதமாக கட்டப்பட்ட மதரஸா இடிக்கப்பட்டதற்கு எதிராக அங்கு பெரும் கலவரம் ஏற்பட்டது. இதில் 6 பேர் உயிரிழந்தனர். சுமார் 300 பேர் காயம் அடைந்தனர். கலவரம் பரவாமல் தடுக்க இணைய சேவை முடக்கப்பட்டது. ஹல்துவானி முழுவதிலும் ஊரடங்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

இதையடுத்து நைனிதால் முழுவதிலும் பிறப்பிக்கப்பட்ட ஊரடங்கு உத்தரவு கடந்த 10ஆம் தேதி தளர்த்தப்பட்டது. எனினும், பதற்றம் அதிகமாக இருந்த வன்புல்புராவில் மட்டும் 144 தடை ஊரடங்கு உத்தரவு நீடித்து வந்தது.

இந்த நிலையில் மாவட்ட நீதிபதி உத்தரவின் பேரில், கவுஜாஜலி, ரயில்வே பஜார், எ∴ப்சிஐ குடோன் உள்ளிட்ட சில பகுதிகளில் காலை 9 மணி முதல் மாலை 4 மணி வரை ஊரடங்கு உத்தரவு தளர்த்தப்படுகிறது. வன்புல்புராவின் மற்ற பகுதிகளில், ஊரடங்கு உத்தரவு காலை 9 மணி முதல் 11 மணி வரை இரண்டு மணி நேரம் மட்டும் தளர்த்தப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

# விருதுநகர் தொகுதியில் பாஜகவில் சீட் கேட்டு 3 பேர் கடும் போட்டி



விருதுநகர் : பிப். 16–

பாஜக சார்பில் விருதுநகர் தொகுதியில் போட்டியிட அக்கட்சியின் மாநில பொதுச் செயலாளர் ராம சீனிவாசனுக்கு போட்டியாக 2 பேர் களமிறங்கியுள்ளனர். இதனால் யாருக்கு சீட் வழங்கப்படும் என்ற எதிர்பார்ப்பு தொண்டர்களிடையே எழுந்துள்ளது.

2019–ல் நடைபெற்ற மக்களவைத் தேர்தலில் விருதுநகர் தொகுதியில் அதிமுக – பாஜக கூட்டணியில் தேமுதிக வேட்பாளர் அழகர்சாமி, திமுக கூட்டணியில் காங்கிரஸ் வேட்பாளர் மாணிக்கம் தாகூர், அமமுக சார்பில் பரமசிவ அய்யப்பன், நாம் தமிழர் கட்சி சார்பில் அருள்மொழித் தேவன், மக்கள் நீதி மய்யம் சார்பில் முனிய சாமி உட்பட 28 வேட்பாளர்கள் போட்டியிட்டனர். இதில், காங்கிரஸ் வேட்பாளர் மாணிக்கம் தாகூர் வெற்றி பெற்றார்.

இந்நிலையில், 2024 மக்களவைத் தேர்தலில் களமிறங்க பாஜக முழு வீச்சில் தயாராகி வருகிறது. மாநில பொதுச் செயலாளர் ராம சீனிவாசனின் ஆதரவாளர்கள், விருதுநகர் மக்களவைத் தொகுதிக்கு உட்பட்ட திருமங்கலம், திருப்பரங்குன்றம் பகுதிகளில் வாக்காளர்களிடம் துண்டு பிரசுரங்களை அளித்து வாக்கு சேகரிக்க தொடங்கிவிட்டனர்.

அதே நேரம், விருதுநகர் கிழக்கு மாவட்டத் தலைவர் பாண்டுரங்கன் தனது அண்ணன் ஜவஹருக்கு வாய்ப்பு கேட்டு கட்சி மேலிடத்தை அணுகியுள்ளார். அதற்கேற்ப அண்மையில் நடைபெற்ற கட்சியின் அனைத்து கூட்டங்களிலும் ஜவஹர் பங்கேற்று வருகிறார்.

இந்நிலையில், டெல்லியில் பாஜகதலைமைஅலுவலகத்தில் பணியாற்றிவரும் டாக்டர் வேதா தாமோதரனும் விருதுநகர் தொகுதியில் போட்டியிட கட்சித் தலைமையிடம் சீட் கேட்டுள்ளதாகக் கூறப்படுகிறது. இவர், மதுரை மாவட்டம் திருமங்கலத்தை பூர்வீகமாகக் கொண்டவர். டெல்லியில் பாஜக அலுவலகத்தில் பணியாற்றி வருகிறார். இவரது தந்தை அகமுடையார், தாய் மறவர் என்பதால் முக்குலத்தோர் வாக்கை சேகரிக்கும் திட்டத்தில் களப்பணியைத் தொடங்கியுள்ளார்.

அதோடு, இவரது தந்தை காலத்தில் ஏராளமான கோயில்கள் கட்டப்பட்டுள்ளதாக கூறப்படுகிறது. அதோடு, தேவேந்திர குல வேளாளரை பொதுப் பட்டியலில் சேர்க்கக் கோரி உயர் நீதிமன்ற கிளையில் வழக்குத் தொடுத்தவர் வேதா தாமோதரன் என்பதும் குறிப்பிடத்தக்கது. இருப்பினும் கட்சியில் இம்முறை யாருக்கு வாய்ப்பு கிடைக்கும் என்ற பெரும் எதிர்பார்ப்பில் 3 அணிகளாக பாஜகவினர் காத்திருக்கின்றனர்.

நாடாளுமன்ற தேர்தலுக்கான இறுதிக்கட்ட பணிகள் குறித்த ஆலோசனை

# பிப். 23ம் தேதி தமிழ்நாடு வருகிறார் இந்திய தலைமை தேர்தல் ஆணையர் ராஜீவ்குமார்



டெல்லி : பிப். 16–

பிப். 23ம் தேதி இந்திய தலைமை தேர்தல் ஆணையர் ராஜீவ்குமார் தமிழ்நாட்டிற்கு வருகை தருகிறார்.

நாடாளுமன்ற தேர்தலுக்கான இறுதிக்கட்ட பணிகள் குறித்த ஆலோசனை நடத்த வரும் பிப்ரவரி 23ம் தேதி இந்திய தலைமை தேர்தல் ஆணையர் ராஜீவ்குமார் சென்னைக்கு வருகை தருகிறார். வரும் 23 மற்றும் 24 ஆகிய இரண்டு நாட்கள் சென்னையில்நடைபெறஉள்ள ஆலோசனை கூட்டத்தில் தமிழ்நாடு மாற்றம் கேரளா ஆகிய மாநிலங்களுடைய தலைமைதேர்தல் அதிகாரிகள், அரசியல் கட்சிகள், காவல்துறை உயரதிகாரிகள், தேர்தல்நடத்தும் அதிகாரிகள் உள்ளிட்டோருடன் ஆலோசனை நடத்துகிறார்.

மேலும் தமிழ்நாட்டிற்கு தேவையான வாக்குச்சாவடி மையங்களின் தேவை மற்றும் மக்களவை தேர்தல் எதிர்கொள்வதற்கான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை எவ்வாறு மாநில தேர்தல் ஆணையம் மேற்கொண்டுள்ளது. வாக்காளர் பட்டியலில் பிரச்சனைகள் உள்ளதா என்பது தொடர்பான இறுதிக்கட்ட பணிகள் அன்றைய தினம் ஆலோசிக்க உள்ளது. எவ்வளவு பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளது என்பதை பற்றியும் ஆலோசனை நடத்த உள்ளது.

தொலைதூர வாக்குச்சாவடிகளுக்கான ஏற்பாடுகள் அவர்களுக்கு தேவையான உதவிகள் எவ்வாறு செய்யப்படுகிறது என்ற கருத்துக்களையும் அவர் ஆலோசனையில் முன்னெடுக்க உள்ளார். தொடர்ச்சியாக பல்வேறு மாநிலங்களுக்கு இந்திய தேர்தல் ஆணையத்தின் அதிகாரிகள் மற்றும் ஆணையர்கள் அங்குள்ள தலைமை தேர்தல் அதிகாரிகளுடன் ஆலோசித்து வரும் நிலையில் தற்போது தமிழகத்திற்கு 23ம் தேதி வருகை தருகிறார்.

# புன்னையாபுரம் அரசு நடுநிலைப்பள்ளியில் 85–வது ஆண்டு விழா



கடையநல்லூர் : பிப். 16–

தென்காசி மாவட்டம், கடையநல்லூர் ஒன்றியத்திற்கு உட்பட்ட புன்னையாபுரம் ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளியின் 85–வது ஆண்டு விழா ஊராட்சி மன்ற தலைவர் திலகவதி கண்ணன், துணைத் தலைவர் திருமலைவேலு தலைமையில் நடைபெற்றது.

பள்ளிதலைமை ஆசிரியை, அனைத்து ஆசிரியர்களையும், நிகழ்ச்சியில் கலந்து கொண்ட பெற்றோர்களையும் வரவேற்றார். 2023– 24 ம் ஆண்டு அறிக்கை வாசிக்கப்பட்டது. இப்பள்ளி 1940–ல் தொடங்கப்பட்டு 1980–ல் நடுநிலைப் பள்ளியாக தரம் உயர்த்தப்பட்டது. 200க்கும் மேற்பட்ட மாணவ, மாணவியர்கள் பயின்று வருகின்றனர். தமிழக அரசால் பள்ளி உபகரணங்கள் இலவசமாக வழங்கப்பட்டு வருகிறது, கல்வி மட்டுமல்லாமல் இலக்கிய மன்றம், வானவில் மன்றம், கணித மன்றம், சுற்றுச்சூழல் மன்றம், இளம் செஞ்சிலுவை சங்கம் போன்றவைகளும், மாணவர்களுக்கு தனித்திறன் வளர்க்கும் விதமாக யோகா, சிலம்பம், கராத்தே போன்ற தற்காப்பு கலைகளும் கற்றுக் கொடுக்கப்படுகிறது.

மாதந்தோறும் சிறார் திரைப்படங்கள், தமிழக முதல்வரின் காலை உணவு திட்டம், மதிய உணவு திட்டம் சிறப்பாக நடைபெற்று வருகிறது. இப்பள்ளியில் பயின்ற மாணவர்கள் ஆடிட்டர், வழக்கறிஞர், பொறியாளர், மருத்துவர்கள், ஆசிரியர்கள், வட்டார கல்வி அலுவலர்கள் போன்ற பதவிகளில் சிறந்து விளங்குகின்றனர். தமிழக அரசால் தரம் உயர்த்தப்பட்டு 83 லட்சத்து 20 ஆயிரம் மதிப்பீட்டில் புதிய கட்டிடம் தமிழக முதல்வரால் திறந்து வைக்கப்பட உள்ளது.

மேலும் ஆண்டு விழாவில் போட்டிகளில் கலந்து கொண்ட மாணவ, மாணவிகளுக்கு பரிசுப் பொருள்களும் ஊக்க தொகையும் வழங்கப்பட்டது. நிகழ்ச்சியில் ஊராட்சி செயலர் தங்கத்துரை, தலைமை ஆசிரியை ச.சக்திலதா, மு.செல்வி, கு.ராணி, பா.தாமரைச்செல்வி, பெ.மரிய புஷ்பம், தமயந்தி, இராஜேஸ்வரி, மாரியம்மாள், சீதாலட்சுமி, பயிற்றுநர்கள் வசந்தி, பாக்கியஜோதி, வைதேகி, சிவரத்தினம், லட்சுமி, விழா பேருரையாற்றினர். கு.ஜெய்சங்கர், தமிழ்ச்செல்வி, ரமேஷ், மருதுபாண்டியன், முருகேசன், தியாகராஜன், சாமி, சுரேஷ், மணிமாறன், ஆறுமுகசாமி ஆகியோர் கலந்து கொண்டனர். மரிய புஷ்பம் அனைவரையும் வரவேற்று நன்றியுரை ஆற்றினார்.

# திமுக எம்எல்ஏ மகன், மருமகள் ஜாமின் மனு பாதிக்கப்பட்ட பெண் ஆஜராக உத்தரவு



சென்னை : பிப். 16–

சென்னை திருவான்மியூர் சவுத் அவென்யூ பகுதியில் உள்ள தனியார் அடுக்குமாடி குடியிருப்பில் வசிக்கும் பல்லாவரம் தொகுதி தி.மு.க. எம்.எல்.ஏ. இ.கருணாநிதியின் மகன் ஆண்ட்ரோ மதிவாணன் வீட்டில் இளம்பெண் மாத சம்பளம் அடிப்படையில் வீட்டு வேலைக்கு சேர்ந்தார்.

ஆனால் அந்த பெண்ணுக்கு பேசியபடி சம்பளம் கொடுக்காமல் கணவன், மனைவி இருவரும் சேர்ந்து கட்டாயப்படுத்தி வேலை வாங்கியதுடன், அவரை அடித்து துன்புறுத்தி கொடுமைப்படுத்தியதாக கூறப்படுகிறது. இதுகுறித்த புகாரின்பேரில் திருவான்மியூர் அனைத்து மகளிர் போலீசார் ஆண்ட்ரோ மதிவாணன், அவருடையமனைவிமெர்லினா ஆகியோர் மீது வழக்குப்பதிவு செய்தனர். இதைத்தொடர்ந்து தலைமறைவான அவர்களை ஆந்திராவில் கைது செய்த போலீசார் புழல் சிறையில் அடைத்தனர்.

இதையடுத்து தி.மு.க. எம்.எல்.ஏ. மகன் ஆண்ட்ரோ மதிவாணன், மெர்லினா ஆகியோர் ஜாமீன் கோரி மனு தாக்கல் செய்தனர். இந்த வழக்கின் விசாரணை சென்னை முதன்மை செசன்ஸ் கோர்ட்டில் நடைபெற்று வருகிறது. இந்தநிலையில் ஜாமின் வழக்கின் விசாரணை சென்னை முதன்மை செசன்ஸ் கோர்ட்டில் நேற்று விசாரணைக்கு வந்தது.

வழக்கு விசாரணையின்போது, தங்களுக்கு எதிராக வன்கொடுமை தடுப்பு சட்டத்தின்கீழ் வழக்குப்பதிவு செய்தது நியாயமற்றது என்று மனுதாரர் தரப்பில் தெரிவிக்கப்பட்டது. மனுவை விசாரித்த நீதிபதி எம்.நிர்மல்குமார், இது தொடர்பாக காவல்துறை, பாதிக்கப்பட்ட பெண் பதில் அளிக்க உத்தரவிட்டார். இதைத்தொடர்ந்து வழக்கின் விசாரணையை பிப்.21–ந் தேதிக்கு ஒத்திவைத்தார்.

# செய்யாறு அருகே சமத்துவ பொங்கல்



தி. மலை. பிப்.16 -
செய்யாறு அருகே ஏழை, எளிய மக்கள் பயன்பெறும் வகையில் சமத்துவ பொங்கல் விழா கொண்டாடப் பட்டது.

திருவண்ணாமலை மாவட்டம் செய்யாறு தாலூக்கா குண்ணவக்கம் கிராமத்தில் சென்னை, அன்னை தெரேசா மகளிர் மேம்பாட்டு அறக்கட்டளை சார்பில் சமத்துவ பொங்கல் அதன் தலைவர் ஜி.அருள்மேரி தலைமையில் நடைபெற்றது. இதில் DICCI மாநில தலைவர் தினேஷ் S சங்கர் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார்.

மாவட்ட ஒருங்கிணைப்பாளர் பத்தியாவரம் அன்புதாஸ் வாழ்த்துரை வழங்கினார் சிருங்கட்டூர் ராபர்ட், அறக்கட்டளை நிர்வாகிகள் தவமணி, தனலட்சுமி, விஸ்ஷா மற்றும் மகளிர் அமைப்பினர் ஊர் பொதுமக்கள் அனைவரும் கலந்து கொண்டனர். இறுதியில் ஏழை மகளிர்களுக்கு இலவச சேலைகளும், நிகழ்ச்சியில் கலந்து கொண்ட அனைவருக்கும் சமத்துவ பொங்கலும் வழங்கப்பட்டது.

# ஆலப்பாக்கம் ஊராட்சியில் இலவச கண் பரிசோதனை முகாம் ஊராட்சி மன்றத் தலைவர் பிரமிளா ஆறுமுகம் துவக்கி வைத்தார்



ஊத்துக்கோட்டை, பிப்16-
திருவள்ளூர் மாவட்டம், எல்லாபுரம் ஒன்றியம், ஆலப்பாக்கம் ஊராட்சியில் இலவச கண் பரிசோதனை மற்றும் அறுவை சிகிச்சை முகாம் நடைபெற்றது.இதனை ஊராட்சிமன்ற தலைவர் பிரமிளாஆறுமுகம் தலைமை தாங்கி துவக்கி வைத்தார். துணைத்தலைவர் எம்.செல்வம் மற்றும் வார்டு உறுப்பினர்கள் முன்னிலை வகித்தனர்.

ஆலப்பாக்கம் ஊராட்சி மன்றம், சென்னை, தண்டையார்பேட்டை எம்.என். கண் மருத்துவமனை, ஜானகி நடராஜன் கண்பார்வை ஆராய்ச்சி மற்றும் மறுவாழ்வு அறக்கட்டளை, சென்னை மாவட்ட கண்பார்வை இழப்பு தடுப்பு சங்கம் ஆகியவை இணைந்து நடத்திய இந்த முகாமில் இக்கிராமத்தைச் சேர்ந்த ஏராளமானோர் கலந்துகொண்டு சிகிச்சை பெற்றனர்.

கண்புரை அறுவை சிகிச்சைக்கு தேர்வு செய்யப்பட்டவர்களுக்கு இலவச கண் அறுவை சிகிச்சை செய்யப்படும் என்று கூறினர்.இதில்,டாக்டர் சூர்யா தலைமையில் வந்திருந்த ஏழு பேர் கொண்ட மருத்துவ குழுவினர்கள்பொதுமக்களுக்கு கண் பரிசோதனை,மாறு கண் பரிசோதனை,கண்ணீர் அழுத்த நோய் பரிசோதனை,சர்க்கரை நோயாளிகளுக்கான விழித்திரை பரிசோதனை உள்ளிட்ட பரிசோதனைகளையும், ஆலோசனைகளையும் வழங்கினர்.நிகழ்ச்சியின் முடிவில்,ஊராட்சி செயலர் பிரபாகரன் நன்றி கூறினார்.

# மாநில அளவிலான கடற்கரை கைபந்து போட்டியில் முத்துசாமி விஸ்வநாதன் உயர்நிலைப்பள்ளி மாணவர்கள் சாதனை



சென்னை,பிப்,16
செங்கல்பட்டு மாவட்டம் கோவளம் கடற்கரையில் குடியரசு தினம் மற்றும் பாரதியார் தின விளையாட்டு போட்டிகள் பள்ளிக்கல்வித்துறை சார்பாக நடைபெற்றது. சென்னை கோவளம் கடற்கரையில் பிப்ரவரி 7-ம் தேதி முதல் பிப்ரவரி 11-ம் தேதி வரை நடைபெற்ற 14 வயதிற்கு உட்பட்ட ஆண்கள் பிரிவில் சீர்காழி தாலுக்கா மாதிரிவேளூரில் உள்ள முத்துசாமி விஸ்வநாதன் உயர்நிலைப்பள்ளி மாணவர்கள் D.விஷ்வா (IX-B), S.ஷாம் (IX-B) ஆகியோரும் பங்கு பெற்று மாநில அளவில் கடற்கரை கையுந்து பந்து போட்டியில் முதலிடம் பிடித்து பள்ளிக்கும் மாவட்டத்திற்கும் பெருமை சேர்த்தனர்.

வெற்றி பெற்ற மாணவர்களையும் பயிற்றுவித்த உடற்கல்வி ஆசிரியர் அவர்களையும் பள்ளி தாளாளர், தலைமையாசிரியர், இருபால் ஆசிரியர்கள், அலுவலக நண்பர்கள், பெற்றோர் ஆசிரியர்கழகதலைவர் மற்றும் முன்னாள் மாணவர்கள் ஆகியோர் பாராட்டி வாழ்த்து தெரிவித்தனர்.

# தற்கொலைக்கும் ஆன்லைன் கேமிற்கும் நேரடி தொடர்பா ? ஆய்வு அறிக்கை வெளியீடு

சென்னை,பிப்,16
அரசால் விதிக்கப்பட்ட அதிக வரியால் தமிழகத்தில் ஆன்லைன் கேமிங் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளது என்றும். மேலும் காவல் துறையினர் தொடரும் வழக்குகள் மற்றும் தவறான பிரச்சாரங்களால் ஆன்லைன் லைன் கேமிங் கடுமையாக பாதிப்படைகிறது என்று தெரிய வருவதாக ஆய்வு கூறப்படுகின்றது

ஆன்லைன் கேம் விளையாட்டில் ஈடுபட்டு அதிக அளவில் நிதி இழப்பீடு ஏற்பட்டதால் தற்கொலைகள் நடந்ததாக தமிழக காவல்துறை பல வழக்குகள் பதிவு செய்தது. இந்த வழக்குகள் கடுமையான சர்ச்சையை ஏற்படுத்தியது இந்த தற்கொலைகளுக்கு உண்மையான காரணம் குறித்து அறிய தமிழக அரசு நிபுணர் குழு ஒன்றை நியமித்தது. தமிழகத்தில் நடந்த பல தற்கொலைகளுக்கு ஆன்லைன் கேமிங் தான் காரணமாகஉள்ளதுஎன்ற பிரச்சாரம் ஆன்லைன் கேமிங் மீது பொது மக்களுக்கு கடுமையான வெறுப்புணர்வை ஏற்படுத்தி உள்ளது.

ஆன்லைன் கேமிங் மட்டுமே தற்கொலைகளுக்கு காரணம் இல்லை என்பது பாதிக்கப்பட்ட குடும்பங்களிடம் மேற்கொண்ட ஆய்வில் தெரியவந்துள்ளது. பஞ்சமாஹாஸ் கோத்ராவில் உள்ள கோவிந்த் குரு பல்கலைக்கழக அரசு மருத்துவக் கல்லூரியின் டீன் மற்றும் மனநோய் பேராசிரியர் டாக்டர் சந்தீப் இந்த ஆய்வை மேற்கொண்டார் பாதிக்கப்பட்ட குடும்பங்களிடம் இந்த ஆய்வு நடந்தது தற்கொலைகளுக்கு ஆன்லைன் கேமிங் மட்டுமே காரணமாக இல்லை குடும்ப பிரச்சினைகளும் காரணமாக அமைந்தது என்று ஆய்வில் தெரியவந்துள்ளது.

ஆன்லைன் கேமிங் மத்திய மாநில அரசுகளுக்கு 6ஆயிரத்து 428கோடி வரி வருவாய் ஈட்டி தந்துள்ளது எனவும் கூறப்படுகிறது. டாக்டர் சந்தீப் மேற்கொண்ட தீவிரமான நேரடி கள ஆய்வு தற்கொலைகளுக்கு குடும்ப சூழ்நிலை உள்ளிட்ட பல்வேறு காரணங்கள் உள்ளன ஆனால் தற்கொலைகளுக்கு ஆன்லைன் கேமிங் மட்டுமே காரணமாக இருப்பதாக ஆன்லைன் விளையாட்டுகளுக்கு எதிரான குழுக்கள் தவறான பிரச்சாரம் செய்கின்றன என டாக்டர் சந்தீப் குழுவின் ஆய்வு முடிவை வேறு சில ஆய்வுகளும் உறுதி செய்தன என்பது குறிப்பிடத்தக்கது.

இது குறித்து பலரிடம் கேட்டபோது ஒரு பத்து பேர் தற்கொலை செய்து கொண்டால் அதில் மூன்று பேர் ஆன் லைன் கேமால், ஆன்லைன் ரம்மியால் பணத்தை இழந்துதற்கொலைசெய்து இருக்கலாம் ,ஆனால் மற்றவர்கள் வேறு வேறு காரணங்களால் தற்கொலை செய்து கொள்கிறார்கள், ஆனாலும் பணத்தை இழந்து தற்கொலை வரை செல்லும் மன உளைச்சல் ஏற்படுத்தும் ஆன் லைன் கேம்மையும், ரம்மியையும் தடை செய்வது தவறு ஒன்றும் இல்லை என சிலர் தெரிவித்தனர்.

ஆன்லைன் கேமிற் ஆதரவாகவும் ,எதிராகவும் சமமாக கருத்து இருந்தாலும் இதன் இறுதி முடிவு அரசு கையில்தான் உள்ளது மேலும் வயதானவர்களுக்கு அல்சைமர் மற்றும் டிமென்ஷியா பிரச்சினைகள் வருவதை தாமதபடுத்துகிறது இது போன்ற சில கூடுதல் நன்மைகளும் ஆன்லைன் கேமிங்கில் இருப்பதாக டாக்டர் ஷா சந்தீப் கூறுகிறார்



செங்கல்பட்டு மாவட்டம் அனைத்து மக்கள் சக்தி இயக்கம் மற்றும் அறக்கட்டளை சார்பாக சிவனடியார்களை கௌரவிக்கும் நிகழ்ச்சியானது ஏ எச் ப்ளாக், எண் 7, எழில் நகர், பெரும்பாக்கம் குடியிருப்பு பகுதியில் நடைபெற்றது.இந்த இந்நிகழ்வில் தேவாரம், திருவாசகம் போன்ற பதிகங்கள் பாடப்பட்டன. ஓதுவார் மயில்வாகனம் நிகழ்ச்சிக்கு தலைமை தாங்கினார். தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியத்தின் சமுதாய வளர்ச்சி பிரிவு ஒருங்கிணைப்பாளர் டார்வின் மற்றும் மேற்பார்வையாளர் தமிழரசி ஆகியோர் முன்னிலை வகித்தனர்.மேலும் நிகழ்ச்சிக்கான சிறப்பான ஏற்பாடுகளை செம்மஞ்சேரி - பெரும்பாக்கம் ஒருங்கிணைப்பாளர் திவ்யா செய்திருந்தார். இந்த நிகழ்ச்சியில் சிறப்பு அழைப்பாளர்களாக மகளிர் அணியின் கீதா கலைமகன், அமுதவள்ளி, புஷ்பா பேராச்செல் இந்திராணி, மைதிலி, பிரியா, செல்வி, தமிழமுது, மாணவரணியின் ராகவன், தேன்மொழி ஆகியோர் நிகழ்ச்சியில் கலந்துகொண்டு சிவனடியார்களை அனைத்து மக்கள் சக்தி இயக்கம் (மற்றும்) அறக்கட்டளைசார்பாக கௌரவித்தனர்.



செங்கல்பட்டு மாவட்டம் திருப்போரூர் சட்டமன்றத் தொகுதிக்கு உட்பட்ட திருப்போரூர் ஒன்றியம் மேலக்கோட்டையூர் ஊராட்சியில் காஞ்சிபுரம் வடக்கு மாவட்ட செயலாளர் குறு சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ.அன்பரசன் ஆலோசனபடி திருப்போரூர் ஒன்றிய பெருந்தலைவர் திருப்போரூர் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் திருப்போரூர் வடக்கு ஒன்றிய செயலாளர் எல்.இதயவர்மன் தலைமை செயற்குழு உறுப்பினர் அன்புசெழியன் ஒன்றிய துணை செயலாளர் ரமேஷ் ஒன்றிய குழு உறுப்பினர் சுரேஷ் மேலக்கோட்டையூர் ஊராட்சி மன்ற தலைவர் கௌதமிஆறுமுகம் ஊராட்சி மன்ற துணை தலைவர் ஏழுமலை வார்டு உறுப்பினர்கள் குருநாதன் , வார்டு உறுப்பினர்கள், கிளை கட்சி செயலாளர் ஜெனேராஜன் கட்சி நிர்வாகிகள் மற்றும் பொதுமக்கள் கலந்து கொண்டு புதிய தார் சாலைகள் அமைப்பதற்கு அடிக்கல் நாட்டினார்கள்.



குடியாத்தம் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட எர்தாங்கல் புதூர் ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளியில் உள்ள வாக்குச்சாவடி மையத்தை வேலூர் மாவட்ட தேர்தல் அலுவலரும் மாவட்ட ஆட்சித்தலைவருமான வே.இரா. சுப்புலெட்சுமி, பார்வையிட்டு ஆய்வு செய்தார். இந்த ஆய்வின்போது குடியாத்தம் வருவாய் கோட்டாட்சியர் சுபலட்சுமி, வட்டாட்சியர் சித்ரா தேவி ஆகியோர் உடன் இருந்தனர்.



உலக மீனவர் தினத்தை முன்னிட்டு நடைபெற்ற பல்வேறு போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கு பரிசளிப்பு மற்றும் நெடுங்காடு கோட்டுச்சேரி தொகுதியை சேர்ந்த 11 மீனவர்களுக்கு ஓய்வூதிய அடையாள அட்டையினை நெடுங்காடு கோட்டுச்சேரி தொகுதி சட்டமன்ற உறுப்பினர் சந்திர பிரியங்கா பயனாளிகளுக்கு வழங்கினார். இந்நிகழ்வில் முக்கிய பிரமுகர்கள் கலந்து கொண்டார்கள்.



சென்னையின் எப் சி அணியின் தலைமை பயிற்சியாளர் ஓவன் கோயல் நேற்று நடந்த பத்திரிக்கை யாளர்கள் சந்திப்பில் கூறுகையில், எங்கள் ஹோம் கிரவுண்டில் விளையாடுவதால் ரசிகர்களின் கூடுதல் உற்ச்சாகம் எங்களுக்கு கிடைக்கும் ,இதனால் நாங்கள் கண்டிப்பாக வெற்றி பெறுவோம் என்றார் சென்னையின் எப் சி மற்றும் கேரளா பிளாஸ்டர்ஸ் ஐஎஸ்எல்லில் தங்களுக்கு இடையே விளையாடிய 19 போட்டிகளில் நேருக்கு நேர் சாதனை படைத்துள்ளது, சென்னை அணி மற்றும் கேரளா பிளாஸ்டர்ஸ் ஆகியோர் தலா ஐந்து போட்டிகளில் வெற்றி பெற்றனர், ஒன்பது டிராவில் முடிந்தது குறிப்பிடத்தக்கது.இன்று மாலை சென்னை நேரு ஸ்டேடியத்தில் போட்டி நடைபெற உள்ளது

# கன்னிகைப்பேர் ஊராட்சி ஒன்றிய தொடக்கப் பள்ளியில் ஆண்டு விழா நடைபெற்றது





ஊத்துக்கோட்டை, பிப்16–
திருவள்ளூர் மாவட்டம், எல்லாபுரம் ஒன்றியம், கன்னிகைப்பேர் கிராமத்தில் ஊராட்சி ஒன்றிய தொடக்கப் பள்ளிஒன்று இயங்கிவருகிறது. இப்பள்ளியின் ஆண்டு விழா நேற்று முன்தினம் நடைபெற்றது.

இந்நிகழ்ச்சிக்கு, பெற்றோர் ஆசிரியர் கழகத் தலைவர் க.கோ. மோகனகிருஷ்ணன் தலைமை தாங்கினார். அனைவரையும் பள்ளியின் தலைமை ஆசிரியர் ஆர்.உதயகுமார் வரவேற்றார். இதில்,சிறப்பு அழைப்பாளர்களாக வட்டார கல்வி அலுவலர்கள் சாதுசசுந்தர், கல்பனா, ஊராட்சி மன்ற தலைவர் காயத்ரிஉதயகுமார்,ஒன்றிய குழு உறுப்பினர் ஜெயலட்சுமிகுமார், பெற்றோர் ஆசிரியர் கழகப் பொருளாளர் மோகன், தமிழ்நாடு தொடக்கப்பள்ளி ஆசிரியர் கூட்டமைப்பின் மாவட்ட செயலாளர் ராஜாஜி,வட்டார தலைவர் செல்வம்,பொருளாளர் ஆனந்த் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

இதில், ஊராட்சி மன்றத் துணைத்தலைவர் மேனகாபிரேம்குமார் நிர்வாகிகள் கே.வி. வெங்கடாஜலம், கண்ணையன் மற்றும் வார்டு உறுப்பினர்கள் ஆகியோர் கலந்துகொண்டு பல்வேறு போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கு பரிசுகளை வழங்கிபாராட்டிபேசினர். இதன் பின்னர்,கண்ணைக் கவரும் வகையில் மாணவர்களின் கலை நிகழ்ச்சிகள் சிறப்பாக நடைபெற்றது.நிகழ்ச்சியின் முடிவில், ஆசிரியர் எஸ்தர் புஷ்பமணி நன்றி கூறினார்.

# அதிமுக சார்பில் செங்கல்பட்டு மாவட்டத்தில் திமுக அரசை கண்டித்து கண்டன பொதுக்கூட்டம்



செங்கல்பட்டு, பிப்,16
அஇஅதிமுக சார்பில் தெருமுனை பிரச்சாரம். செங்கல்பட்டுமாவட்டம்கவளம், செம்மஞ்சேரி குப்பத்தில் அஇஅதிமுக கட்சியின் சார்பில் திருப்போரூர் வடக்கு ஒன்றியம் சார்பில் ஒன்றிய கட்சி செயலாளர் தையூர் எஸ். குமரவேல் தலைமையில் ஆளும் திமுக கட்சியின் அரசை கண்டித்துநடைப்பெற்ற தெருமுனைப்பிரச்சார பொதுக்கூட்டத்தில் தலைமைக் கழக பேச்சாளர் காவேரி கலந்துக்கொண்டனர்.

மேலும் இந்த பொதுக்கூட்டத்தில் சுமார் 300க்கும்மேற்பட்ட பொதுமக்கள் மற்றும் கட்சியினர் கலந்துக் கொண்டார்கள். இதைவ்போல செங்கல்பட்டு மாவட்டம் திருப்போரூர் ஒன்றியத்திற்குட்பட்ட கோவளம் முதல்நிலை ஊராட்சி செம்மஞ்சேரி குப்பத்தில் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக்கட்சியின் செங்கல்பட்டுகிழக்கு மாவட்டம் திருப்போரூர் வடக்கு ஒன்றியம் சார்பில் ஆளும் திமுக அரசை கண்டித்தும் ,10 ஆண்டுகால அஇஅதிமுக கட்சியின் சாதனைகளை விளக்கி தெருமுனைப்பிரச்சார கூட்டம் நடைப்பெற்றது.

இந்த இக்கூட்டத்திற்கு திருப்போரூர் வடக்கு ஒன்றிய செயலாளரும், தையூர் ஊராட்சி மன்ற தலைவருமான தையூர் எஸ். குமரவேல் தலைமைதாங்கினார். இதில் சிறப்பு அழைப்பாளராக செங்கல்பட்டு கிழக்கு மாவட்ட செயலாளர் திருக்கழுகுன்றம் எஸ்.ஆறுமுகம் கட்சியின் தலைமை பேச்சாளர் காவேரி கலந்துக்கொண்டு ஆளும் திமுக அரசை கண்டித்தும், தமிழகத்தை கடந்த 10 ஆண்டுகள் ஆட்சி செய்த அஇஅதிமுக அரசு செய்த சாதனைகள் குறித்தும், பொதுமக்களிடையே எடுத்துரைத்து கண்டன உரையாற்றினார்.

மேலும் இக்கூட்டத்தில் மாவட்ட இளைஞர் மற்றும் இளம்பெண்கள் பாசறை செயலாளர் கோவளம் எம். பாஸ்கர், கோவளம் திருவிடந்தை ஊராட்சி ஒன்றிய குழு உறுப்பினர் யாஸ்மின் பாஸ்கர், மாவட்ட கட்சி இணை செயலாளர் எஸ்வந்த்ராவ், மாவட்ட அம்மா பேரவை செயலாளர் ஆனூர் பக்தவச்சலம், மாவட்ட இளைஞர் அணிசெயலாளரும் பையனூர் ஊராட்சி மன்ற துணை தலைவருமான குமார், முன்னாள் கோவளம் ஊராட்சி மன்ற தலைவர் ஜானகிராமன், மாவட்ட மீனவர் அணி இணை செயலாளர் தீனன், மாவட்ட கலைப்பிரிவு பொருளாளர் கோவளம் தீனதயாளன், மற்றும் கோவளம் ஊராட்சிநிர்வாகிகள் சுகுமாரன், தவமணி, அப்துல்ரசாக், மோகன், முருகன்,தேவராஜ், புகழ், பக்கிரி, புகழேந்தி, அருள்மிகு, தீனன் மற்றும் கழக நிர்வாகிகள் கட்சியினர், தொண்டர்கள் மற்றும் பொதுமக்கள் என 400க்கும் மேற்பட்டவர்கள் கலந்துக் கொண்டார்கள். இந்நிகழ்ச்சிக்கான அனைத்து ஏற்பாடுகளையும் திருப்போரூர் வடக்கு ஒன்றிய கட்சி சார்பில் செய்யப்பட்டிருந்தது.



சென்னை பெருநகர மாநகராட்சி திருவொற்றியூர் நான்காவது வார்டுக்கு உட்பட்ட ஜோதி நகர் பகுதியில் கடந்த 20 ஆண்டுகாலமாக சாலைகள் போடப்படாமல் குண்டும் குழியுமான சாலையை பொதுமக்கள் மிகவும் சிரமப்பட்டு பயன்படுத்தி வந்தனர், இதனை அடுத்து கம்யூனிஸ்ட் கட்சியை சேர்ந்த மாமன்ற உறுப்பினர் ஜெயராமன் மேம்பாட்டு நிதியிலிருந்து ரூபாய் 48 லட்சம் ரூபாய் செலவில் சாலை அமைக்கும் பணிகள் தொடங்கப்பட்டன இதனை அடுத்து அப்பகுதியில் 4.50 லட்சம் செலவில் தெருவிளக்குகளும் அதே போன்று மழை வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட எர்ணாவூர் ஆதி திராவிடர் நல காலணியில் விளையாட்டு திடலில் 20 லட்சம் மதிப்பீட்டில் சுற்றுச்சுவர் முகப்பு அமைக்கும் பணிகள் இன்று தொடங்கப்பட்டன 72 லட்ச ரூபாய் செலவில் நடைபெறும் திட்ட பணிகளை சென்னை பெருநகர மாநகராட்சி ஒன்றாவது மண்டல குழு தலைவர் தனியரசு அடிக்கல் நாட்டில் தொடங்கி வைத்தார்



சென்னை பெருநகர மாநகராட்சி திருவொற்றியூர் நான்காவது வார்டுக்கு உட்பட்ட ஜோதி நகர் பகுதியில் கடந்த 20 ஆண்டுகாலமாக சாலைகள் போடப்படாமல் குண்டும் குழியுமான சாலையை பொதுமக்கள் மிகவும் சிரமப்பட்டு பயன்படுத்தி வந்தனர் இதனை அடுத்து கம்யூனிஸ்ட் கட்சியை சேர்ந்த மாமன்ற உறுப்பினர் ஜெயராமன் மேம்பாட்டு நிதியிலிருந்து ரூபாய் 48 லட்சம் ரூபாய் செலவில் சாலை அமைக்கும் பணிகள் தொடங்கப்பட்டன. இதனை அடுத்து அப்பகுதியில் 4.50 லட்சம் செலவில் தெருவிளக்குகளும் அதே போன்று மழை வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட எர்ணாவூர் ஆதி திராவிடர் நல காலணியில் விளையாட்டு திடலில் 20 லட்சம் மதிப்பீட்டில் சுற்றுச்சுவர் முகப்பு அமைக்கும் பணிகள் இன்று தொடங்கப்பட்டன. 72 லட்ச ரூபாய் செலவில் நடைபெறும் திட்ட பணிகளை சென்னை பெருநகர மாநகராட்சி ஒன்றாவது மண்டல குழு தலைவர் தனியரசு அடிக்கல் நாட்டில் தொடங்கி வைத்தார்

# பொன்சிறுவரை ஸ்ரீ தர்மசாஸ்தா ஸ்ரீஅய்யனார் திருக்கோயில் மஹா கும்பாபிஷேகம் – திருச்சி பாராளுமன்ற உறுப்பினர் திருநாவுக்கரசர் பங்கேற்பு





ஆவுடையார்கோவில், பிப்.16–

புதுக்கோட்டை மாவட்டம் ஆவுடையார்கோவில் அருகே பொன்சிறுவரை கிராமத்தில் எழுந்தருளியுள்ள ஸ்ரீ தர்மசாஸ்தா ஸ்ரீ அய்யனார் உள்ளிட்ட திருக்கோயில்கள் அமைந்துள்ளது.

திருச்சி பாராளுமன்ற உறுப்பினர் திருநாவுக்கரசரின் குலதெய்வ கோயிலான இக்கோயில் கும்பாபிஷேகம் செய்வதென அப்பகுதி மற்றும் சுற்று வட்டார கிராமத்தார்களால் முடிவு செய்யப்பட்டு கோவில் புணரமைப்பு பணிகள்முடிவுற்ற நிலையில் சிறப்பான யாகசாலை பூஜை அமைக்கப்பட்டு கடந்த செவ்வாய்கிழமை கணபதி ஹோமத்துடன் முதற்கால யாகபூஜை தொடங்கியது விழாவின் முக்கிய நாளான நேற்றுநான்காம்காலயாகபூஜை நிறைவுற்றுமேளதாளங்களுடன் கடம்புறப்பாடு நிகழ்வு நடைபெற்றது.

கடம் புறப்பாடானது கோவிலை சுற்றி வளம் வந்த பின்னர் கோபுர கலசத்தை அடைந்தது, பொன்பேத்தி மணிகண்ட பட்டாச்சார்யா தலைமையிலான சிவாச்சாரியார்கள் வேத மந்திரங்கள் முழங்க மஹா கும்பாபிஷேகம் நடைபெற்றது, கும்பாபிஷேக நிகழ்ச்சியில் திருச்சி பாராளுமன்ற உறுப்பினர் திருநாவுக்கரசர் மற்றும் அறந்தாங்கி சட்டமன்ற உறுப்பினர் ராமச்சந்திரன் உள்ளிட்ட சுற்று வட்டார கிராமங்களிலிருந்து ஆயிரக்கணக்கானோர் கலந்து கொண்டு கோபுர தரிசனம் செய்தனர்,

கும்பாபிஷேக நிகழ்ச்சியில் கலந்து. கொண்ட அனைவருக்கும் அன்னதானம் வழங்கப்பட்டது, ஆவுடையார்கோவில்போலீசார் பாதுகாப்பு பணியில் ஈடுபட்டனர்.

# புதுச்சேரி இடைக்கால பட்ஜெட் பிப்.22–ல் தாக்கல்



புதுச்சேரி : பிப். 16–

புதுச்சேரி சட்டப்பேரவை வரும் 22–ம் தேதி கூடுகிறது. அன்றையதினம் முதல்வர் ரங்கசாமி இடைக்கால பட்ஜெட்டை தாக்கல் செய்கிறார்.

புதுச்சேரி சட்டப்பேரவையில் ஆண்டுதோறும் மார்ச் மாதம் பட்ஜெட் தாக்கல் செய்யப்படும். ஆனால், புதுச்சேரி சட்டப்பேரவையில் 2011–ம் ஆண்டு முதல் தொடர்ந்து இடைக்கால பட்ஜெட் தாக்கல் செய்யப்பட்டு வந்தது. நடப்பு நிதியாண்டு மார்ச் மாதம் 9–ம் தேதி ஆளுநர் உரையுடன் தொடங்கிய சட்டப்பேரவையில் முழுமையான பட்ஜெட் தாக்கல் செய்யப்பட்டது.

6 மாதங்களுக்கு ஒரு முறைசட்டப்பேரவையை கூட்ட வேண்டும் என்ற விதிமுறை காரணமாக கடந்தசெப்டம்பர்9–ம்தேதி மீண்டும் சட்டப்பேரவை கூட்டப்பட்டது. ஒரு நாள் நடந்த கூட்டம் அலுவல்கள் முடிந்து ஒத்திவைக்கப்பட்டது.

இந்த நிலையில், மக்களவைத் தேர்தல் வருவதால் மார்ச் மாதம் மீண்டும் முழுமையான பட்ஜெட்டை தாக்கல் செய்ய முடியாத நிலை உருவாகியுள்ளது. அதே நேரத்தில் அரசின் நிதி செலவினங்களுக்கு ஒப்புதல் பெற வரும் 22–ம் தேதி காலை 9.45 மணிக்கு புதுவை சட்டப்பேரவை கூடுகிறது. அன்றையதினம் நிதி பொறுப்பு வகிக்கும் முதல்வர் ரங்கசாமி, 2024 – 25–ம் ஆண்டுக்கான இடைக்காலபட்ஜெட்டை தாக்கல் செய்கிறார். அடுத்த 4 மாதத்துக்கான இடைக்கால பட்ஜெட் தாக்கல் செய்யப்படும் எனத் தெரிகிறது.

புதுச்சேரி சட்டப்பேரவைத் தலைவர் செல்வம் கூறியது: “புதுச்சேரி சட்டப்பேரவை வரும் 22–ம் தேதி காலை 9.45 மணிக்கு சட்டப்பேரவை கூடுகிறது. அன்றைய தினத்தில் 2024–25ம் நிதியாண்டுக்கான முன்னளி மானிய திட்ட முன்வரைவு பேரவையில் முதல்வர் ரங்கசாமியால் அறிமுகப்படுத்தப்பட்டு கருத்துகை செய்யப்படும். பேரவை முன்வைக்கப்பட வேண்டிய ஏடுகள் இருந்தால், அவற்றை சட்டசபையில் வைக்க அரசு துறைகளுக்கு அறிவுறுத்தப்படும். கூடுதல் நிதிக்கான செலவை மத்திய அரசு ஒதுக்கியுள்ளது.

மக்களவைத் தேர்தலையொட்டி அனைத்து மாநிலங்களும் இடைக்கால பட்ஜெட் தாக்கல் செய்கின்றனர். புதுச்சேரியிலும் இடைக்கால பட்ஜெட்தான். 2023–24ம் நிதியாண்டுக்கான கூடுதல் செவினங்களும் அறிமுகம் செய்யப்படும் வாய்ப்பும் உள்ளது. எத்தனைநாட்கள்பேரவை நடக்கும் என்பதை அலுவல் ஆய்வுக்குழு கூடி முடிவு செய்யும். கடந்த நிதியாண்டு பட்ஜெட்டில் 75 சதவீதம் செலவு செய்யப்பட்டுள்ளது. மீதமுள்ள நிதியை முழுமையாக செலவு செய்ய முதல்வர் ரங்கசாமி அதிகாரிகளுக்கு உத்தரவிட்டுள்ளார். இதனால், இந்த நிதியாண்டில் முழுமையாக நிதி செலவு செய்யப்படும்” என்று தெரிவித்தார்.

# தேக்வாண்டோ தகுதிப்பட்டை தேர்வில் புதுக்கோட்டை ஸ்ரீ வெங்கடேஸ்வரா மெட்ரிக் பள்ளி மாணவர்கள் சாதனை



புதுக்கோட்டை, பிப்.16–

புதுக்கோட்டை திருக்கோகர்ணம் ஸ்ரீ வெங்கடேஸ்வரா மெட்ரிக். மேல்நிலைப்பள்ளி மாணவர்கள் தேக்வாண்டோ தகுதிப்பட்டை தேர்வில் அதிக அளவில் பங்குபெற்று வெற்றிபெற்றுள்ளனர், இந்த ஆண்டுக்கான தேக்வாண்டோ தற்காப்புக் கலையில் மாணவர்களுக்கு டேக்வாண்டோ தேர்வு மற்றும் தகுதிப்பட்டை வழங்கும் விழா சமஸ்கிருத வித்யாலயா ஓரியண்டல் பள்ளியில் நடைபெற்றது.

இந்த விழாவில் 350க்கும் மேற்பட்ட வீரர்கள் மற்றும் வீராங்கனைகள் கலந்து கொண்டனர், இந்த தேர்வுகளில் ஸ்ரீ வெங்கடேஸ்வரா மெட்ரிக் மேல்நிலைப்பள்ளி மாணவர்கள் அதிக அளவில் கலந்து கொண்டு செய்முறைகளை சிறப்பாக செய்து அனைவரது பாராட்டுகளையும் பெற்று டேக்வோண்டாதகுதிப்பட்டைமற்றும் சான்றிதழ்கள்பெற்றனர்,தேர்வினை கன்னியாகுமரியிலிருந்து வந்து மாஸ்டர் ஜெயசீலன் நடத்தினார்.

டேக்வாண்டோ தெர்வில் சிறப்பாக செய்து தகுதிப்பட்டை பெற்று பள்ளிக்குப் பெருமை சேர்த்த மாணவர்களை பள்ளியின் முதல்வர் கவிஞர் தங்கம்மூர்த்தி பரிசுகள் வழங்கி பாராட்டினார், டேக்வாண்டோ பயிற்சியாளர் ஆகாஷ்,மாஸ்டர் சேது கார்த்திகேயன் உள்ளிட்ட ஆசிரியர்கள் டேக்வாண்டோ தகுதிப்பட்டை பெற்ற மாணவர்களுக்கு வாழ்த்துகளை தெரிவித்தனர்.

# புதுக்கோட்டையில் சிறப்பு கல்விக் கடன் முகாம் மாவட்ட ஆட்சித்தலைவர் துவக்கி வைத்தார்



புதுக்கோட்டை, பிப்.16–

புதுக்கோட்டை கலைஞர் கருணாநிதி அரசு மகளிர் கலைக்கல்லூரியில், மாவட்ட நிர்வாகம் மற்றும் மாவட்ட முன்னோடி வங்கி இணைந்து நடத்தும் ‘மாபெரும் சிறப்பு கல்விக் கடன் முகாமினை”மாவட்ட ஆட்சித்தலைவர் மெர்சி ரம்யா நேற்றுதுவக்கிவைத்து,மாணவ, மாணவிகளுக்கு கல்விக் கடன் உதவித்தொகைக்கான ஆணைகள் மற்றும் காசோலைகளை வழங்கினார். பின்னர் அவர் தெரிவித்ததாவது;

தமிழ்நாடு முதலமைச்சர; அவர;கள் மாணவ, மாணவிகள் அனைவரும் கல்வியில் சிறந்து விளங்கி நல்லதோர் எதிர்காலத்தினை அமைக்கும் வகையில் பல்வேறு கல்வி சார்ந்த திட்டங்களை செயல்படுத்தி வருகிறார்கள். அந்தவகையில் இல்லம் தேடிக் கல்வி, முதலமைச்சரின் காலை உணவுத் திட்டம், நான் முதல்வன், புதுமைப் பெண் உள்ளிட்ட பல்வேறு திட்டங்களின் மூலம் மாணவ, மாணவிகளின் கல்வி ஆர்வத்தினை மென்மேலும் அதிகரித்து வருகிறார்கள். அதன்படி, இன்றையதினம் புதுக்கோட்டை கலைஞர் கருணாநிதி அரசு மகளிர் கலைக்கல்லூரியில் ‘மாபெரும் சிறப்பு கல்விக் கடன் முகாம்” துவக்கி வைக்கப்பட்டுள்ளது.

இந்த சிறப்பு கல்விக் கடன் முகாமில், மாவட்டத்திற்குள் கல்லூரி பயின்று கொண்டிருக்கும் மாணவ, மாணவியரும், புதுக்கோட்டை மாவட்டத்தை இருப்பிடமாகக் கொண்டுமற்றமாவட்டங்களில், மற்ற மாநிலங்களில் மற்றும் வெளிநாடுகளில் பயின்று கொண்டிருக்கும் மாணவ, மாணவியரும் கல்விக் கடன் பெற தகுதியுடையோர் ஆவர். மேலும் மாணவ, மாணவியர் கல்விக்கடனுக்கு புதிதாக விண்ணப்பிக்க மற்றும் இதர சான்றிதழ்களை பெற கல்லூரி வளாகத்திலேயே இ–சேவை மைய வசதி ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

புதுக்கோட்டை மாவட்டத்தில் இதுவரை சுமார் 700–க்கும் மேற்பட்ட மாணவ, மாணவிகளுக்கு ரூ.18.69 கோடி மதிப்பீட்டில் வங்கிகளின் மூலம் கல்விக்கடன் வழங்கப்பட்டுள்ளது. இம்முகாமில் கல்விக்கடனுக்கு விண்ணப்பித்த 128 மாணவ, மாணவிகளுக்கு ரூ.6.98 கோடி மதிப்பீட்டில்; பல்வேறு வங்கி கிளைகளின் மூலம் வழங்கப்பட உள்ளது. எனவே மாணவ, மாணவிகள் அனைவரும் இம்முகாமினை பயன்படுத்திக் கொண்டு வங்கிகளின் மூலம் கல்விக் கடன் பெற்று தங்களின் உயர் கல்வி பயிலும் கனவினை நனவாக்கிக் கொள்ள வேண்டும் என தெரிவித்தார்.

இந்நிகழ்வில், மாநிலங்களவை உறுப்பினர் அப்துல்லா, புதுக்கோட்டை வருவாய் கோட்டாட்சியர் ஐஸ்வர்யா, மாவட்ட முன்னோடி வங்கி மேலாளர் ஆனந்த், வாழ்ந்து காட்டுவோம் திட்ட மாவட்ட செயல் அலுவலர் செல்வம், கலைஞர் கருணாநிதி அரசு மகளிர் கலைக்கல்லூரி முதல்வர் ஜெ.சுகந்தி, வட்டாட்சியர் பரணி, அனைத்து வங்கி மேலாளர்கள் மற்றும் அரசு அலுவலர்கள் பலர் கலந்துகொண்டனர்.

# மதுரை சுங்கச்சாவடி அருகே பாஜக நிர்வாகி ஓட ஓட வெட்டிக் கொலை



மதுரை : பிப். 16–

மதுரை வண்டியூரில் பாஜக நிர்வாகி ஓட ஓட விரட்டி வெட்டிப்படுகொலை செய்யப்பட்ட சம்பவம் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

மதுரை அண்ணாநகரைச் சேர்ந்தவர் சக்திவேல். இவர் பாஜக ஓபிசி பிரிவு மாவட்டச் செயலாளராக இருந்தார். இவர் மதுரை வண்டியூர் சுங்கச்சாவடி அருகே டூவீலரில் நேற்று சென்று கொண்டிருந்தார்.

அப்போது அவரை டூவீலரில்பின்தொடர்ந்துவந்த கும்பல் வழிமறித்துள்ளது. இதனால் டூவீலரைப் போட்டு விட்டு சக்திவேல் தப்பியோட முயன்றார். ஆனால், அந்தக்கும்பல், சக்திவேலை ஓட ஓட விரட்டி வெட்டிக்கொலை செய்தது. இதன் பின் அந்தக் கும்பல் அங்கிருந்து தப்பியோடி விட்டது.

இந்த கொலை சம்பவம் குறித்த தகவல் அறிந்த அண்ணாநகர் போலீஸார், விரைந்து சென்று சக்திவேல் உடலைக் கைப்பற்றி பிரேத பரிசோதனைக்காக மதுரை அரசு ராஜாஜி மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர். இக்கொலை தொடர்பாக வழக்குப்பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர். சக்திவேலின் தனிப்பட்ட மோதல் காரணமாக கொலை நடந்ததாக முதற்கட்ட விசாரணையில் தெரிய வந்ததாக போலீஸார் தெரிவித்துள்ளனர்.

தமிழகத்தில் பாஜக நிர்வாகிகள் வெட்டிக் கொலை செய்யப்படும் சம்பவங்கள் அதிகரித்து வருகிறது. கடந்த ஆண்டு நெல்லை பாளையங்கோட்டை பகுதியில் பாஜக மாவட்ட இளைஞர் அணி செயலாளர் ஜெகன் வெட்டிக்கொலை செய்யப்பட்டார். கடந்த செப்டம்பர் மாதம் சென்னை மேற்கு தாம்பரம் அருகே பாஜக எஸ்.சி அணி மண்டல தலைவர் பீரி வெங்கடேசன் கொடூரமாக கொலை செய்யப்பட்டார். இந்த நிலையில் மதுரை பாஜக நிர்வாகி சக்திவேல் நேற்று வெட்டிக்கொலை செய்யப்பட்ட சம்பவம் பதற்றத்தை ஏற்படுத்தியுள்ளது.

# மதுரையில் ஓடைப்பட்டி கிராமம் ஸ்ரீ மந்தையம்மன் திருக்கோவில் மகா கும்பாபிஷேகம்



மதுரை,பிப்.16–

மதுரை மாவட்டம் கிழக்கு வட்டம் கருப்பையா ஊரணி அருகே அமைந்துள்ள பட்டி கிராமத்தில் அனைவருக்கும் அருள் பாலித்து கொண்டு இருக்கும் அருள்மிகு ஸ்ரீ மந்தை அம்மன் கோவில் மகா கும்பாபிஷேக விழா வெகு விமர்சியாக தொடங்கப்பட்டு. அர்சகர்கள் மந்திரம் ஓத யாகசாலை யாகம் சிறப்பாக நடைபெற்றது.

இதனை தொடர்ந்து நேற்று மகா கும்பாபிஷேக யாகங்கள் தொடங்கப்பட்டு யாகசாலையில் தீர்த்த குடங்களுக்கு விசேஷ பூஜை செய்யப்பட்டது அந்த வேளையில் கருட பகவான் கோயிலில் கோபுரத்துக்கு உச்சியில் வட்டம் இட்டு பத்தகோடிகளுக்கு காட்சியளித்தார், அதன் பின்பு கலச தீர்த்தமானது மங்கள வாத்தியங்கள் முழங்க கோவிலின் கலசத்திற்கு அபிஷேகம் நடைபெற்றது, இந்நிகழ்ச்சியில் லட்சக்கணக்கான பக்த கோடிகளும் மெய் அன்பர்களும் அடியார் பெருமக்களும் கலந்துகொண்டு அம்மனின் அருள் பெற்று சென்றனர்.

# அரியலூரில் அனைத்து அரசு அலுவலர்கள் ஆசிரியர் சங்க கூட்டமைப்பு சார்பில் வேலை நிறுத்த ஆர்ப்பாட்டம்



அரியலூர்,பிப்.16–

தமிழ்நாடு அனைத்து அரசு அலுவலர்கள், ஆசிரியர்கள் மற்றும் உள்ளாட்சிப் பணியாளர்கள் சங்கங்களின் கூட்டமைப்பு சார்பில் மாநிலம் தழுவிய தலைநகரில் நடைபெறும், ஒரு நாள் அடையாள வேலைநிறுத்த போராட்டம், அரியலூர் அண்ணா சிலை முன்பு நடைபெற்றது.

ஆர்ப்பாட்டத்துக்கு தமிழ்நாடு தொடக்கப்பள்ளி ஆசிரியர் கூட்டணி அரியலூர் வட்டாரத் தலைவர் அருள்ஜோதி தலைமை தாங்கினார், மாவட்டத் துணைத் தலைவரும் வட்டாரச் செயலாளருமான சண்முகம் அனைவரையும் வரவேற்று பேசினார், ஆர்ப்பாட்ட கோஷங்களை முன்னாள் மாவட்ட பொருளாளர் மார்ட்டின் ஆரோக்கியராஜ் முழங்கிட, உறுப்பினர்கள் அனைவரும் கோஷங்களை எழுப்பினர்.

அரியலூர் மாவட்டச் செயலாளர் மாநிலத் துணைத் தலைவர் எழில், ஆர்ப்பாட்ட கோரிக்கைகளை எடுத்துரைத்தார், மேனாள் வட்டார செயலாளர் கிரீம்சன், முதுகலை பட்டதாரி ஆசிரியர் சங்கம் வேலுசாமி மற்றும் என். ஜி.ஓ சங்க பொறுப்பாளர்கள் பலரும் கோரிக்கைகளை எடுத்துரைத்தார்கள், முடிவில் அரியலூர் வட்டாரப் பொருளாளர் சேகர் நன்றியுரை கூறினார், தமிழ்நாடு அனைத்து அரசு அலுவலர்கள், ஆசிரியர்கள் மற்றும் உள்ளாட்சிப் பணியாளர்கள் சங்கங்களின் கூட்டமைப்பு பொறுப்பாளர்கள் மற்றும் உறுப்பினர்கள் பெருந்திரளாக கலந்து கொண்டனர்.

# கட்சிகளுக்கு ரூ. 850.43 கோடி நன்கொடை பாஜகவுக்கு 8 மடங்கு அதிகமாக கார்ப்பரேட் நிதி



டெல்லி : பிப். 16–

2022–23 நிதியாண்டில் அரசியல் கட்சிகளுக்கு கார்ப்பரேட் நிறுவனங்கள் மொத்தம் ரூ.680.49 கோடியை நன்கொடையாக வழங்கியுள்ளன. ரூ.980.49 கோடியில் 90 சதவீதம் அதாவது ரூ.610.49 கோடி பா.ஜ.க.வுக்கு சென்றுள்ளது.

இதே காலகட்டத்தில் காங்கிரஸ் கட்சிக்கு கார்ப்பரேட் நிறுவனங்கள் ரூ.55.62கோடி நன்கொடை வழங்கியுள்ளன. 2021–22 நிதியாண்டில் பா.ஜ.க. ரூ.614.62 கோடி நன்கொடை பெற்ற நிலையில் 2022–23 நிதியாண்டில் அதிக நன்கொடை. காங்கிரஸ் கட்சிக்கு 2021–22–ல் ரூ.95.45 கோடி நிதி கிடைத்த நிலையில் 2022–23–ல் ரூ.79.92 கோடி மட்டுமே நன்கொடை.

2022–23–ல் அரசியல் கட்சிகளுக்கு கிடைத்த நன்கொடைகளில் 80.1 சதவீதம் கார்ப்பரேட் நிறுவனங்கள் வழங்கியவை ஆகும். பா.ஜ.க.வை தவிர எஞ்சிய அரசியல் கட்சிகள் அனைத்துக்கும் கார்ப்பரேட் நிறுவனங்கள் அளித்த நன்கொடை ரூ.70 கோடி. மற்ற கட்சிகளை காட்டிலும் பா.ஜ.க.வுக்கு கிடைத்த கார்ப்பரேட் நிறுவனங்களின் நன்கொடை 8 மடங்கு அதிகம்.

# ஆவுடையார்கோயில் அருகே குலதெய்வ கோயில் தரிசனத்திற்கு பின் திருச்சி பாராளுமன்ற உறுப்பினர் திருநாவுக்கரசர் பேட்டி



ஆவுடையார்கோயில், பிப்.16–

ஆவுடையார்கோயில் அருகே உள்ள பொன். சிறுவரை கிராமத்தில் உள்ள குலதெய்வ கோயில் தரிசனத்திற்கு பின் திருச்சி பாராளுமன்ற உறுப்பினர் திருநாவுக்கரசர் வருகின்ற பாராளுமன்ற தேர்தலில் திருச்சி தொகுதியிலேயே மீண்டும் போட்டியிட விருப்பம் என பேட்டியளித்துள்ளார்/

டெல்லி விவசாயிகள் போராட்டம் மிக பிரம்மாண்டமாக பஞ்சாப் ஹரியானா மாநிலங்களில் இருக்கக்கூடிய விவசாயிகள் பல்லாயிரக்கணக்கான டிராக்டர் வாகனங்களில் வந்து பெரும் போராட்டத்தை நடத்திக் கொண்டிருக்கிறார்கள், கடந்த முறையும் விவசாயிகளை சந்தித்து பிரதமர் பேசவில்லை அவர்கள் மாதக்கணக்கில் பனியில் குளிரில் கிடந்து நோய்வாய்ப்பட்டு கஷ்டப்பட்டார்கள் , இந்த முறையும் தண்ணீரை பீச்சி அடித்து விவசாயிகளின் போராட்டத்தை ஒடுக்குவதற்காக பல்வேறு விதமான யுக்திகளை கையாளுகிறார்கள்.

விவசாயிகள் இப்போதே சிலபேர் காயம்பட்டு இருக்கிறார்கள் விவசாயிகளை தொலைபேசி மூலமாக காங்கிரஸ் தலைவர் ராகுல்காந்தி நலம் விசாரித்தார் மீண்டும் ஆட்சிக்கு காங்கிரஸ் வந்தால் தங்களுக்கு உதவியாக இருந்து உங்கள் கோரிக்கைகளை நிறைவேற்றுகிறோம் என்று வாக்குறுதி அளித்துள்ளார், பத்து ஆண்டுகளுக்கு முன்பே பிரதமர் மோடி விவசாயிகளிடம் இது போன்ற வாக்குறுதிகளை அளித்துள்ளார்

பிரதமர் மற்றும் துறை சார்ந்த அமைச்சர்கள் விவசாயிகளை சந்தித்து அவர்கள் பிரச்னைக்கு தீர்வு காண முயற்சிக்க வேண்டுமே தவிர அரசு இயந்திரத்தை பயன்படுத்தி விவசாயிகளை ஒடுக்க அச்சுறுத்த முயல கூடாது இது கண்டனத்திற்கு உரியது - இந்தியாவை மூன்றாவது வல்லரசு நாடாக ஆக்குவோம் என்று பிரதமர் மோடி கடந்த 10 ஆண்டுகளில் ஒன்றுமே செய்யவில்லை 2 கோடி பேருக்கு வேலை தருவோம் என்று உத்தரவாதம் அளித்த மோடி 10 ஆண்டுகளில் 20 கோடி பேருக்கு வேலை கொடுத்திருக்கலாம் அவர் எதுவுமே செய்யவில்லை, இந்த பத்து ஆண்டுகளில் செய்யாததை வருகின்ற ஆண்டுகளில் செய்வோம் என்று சொல்வது மக்கள் நம்ப தயாராக இல்லை, ஒரே நாடு ஒரே தேர்தல் தமிழ்நாடு முதலமைச்சர் ஸ்டாலின் சட்டப்பேரவையில் தீர்மானம் நிறைவேற்றியுள்ளார், காங்கிரஸ் சார்பில் வரவேற்கிறோம்.

இந்தியாவில் 30–க்கும் மேற்பட்ட மாநிலங்கள் இருப்பதால் ஒரே நேரத்தில் ஒரே தேர்தல் நடத்த முடியாது, திடீரென மத்திய அரசு கவிழ்ந்து விட்டால் எல்லா மாநிலத்திலும் கவிழ்த்துவிட்டு ஆட்சி அமைக்க முடியுமா ஆகவே ஒரே நாடு ஒரே தேர்தல் என்பது நடைமுறையில் சாத்திய கூறு இல்லாதது என்றும் எம்.பி. திருநாவுக்கரசர் பேசினார்.

# அரியலூர் மாவட்ட இணைய குற்றப்பிரிவு சார்பாக விழிப்புணர்வு பேரணி



அரியலூர்,பிப்.16–

அரியலூர் மாவட்ட இணைய குற்ற பிரிவு சார்பாக விழிப்புணர்வு பேரணி நடைபெற்றது,இது பற்றி அரியலூர் மாவட்ட காவல்துறை வெளியிட்ட செய்தி குறிப்பில்,

அரியலூர் மாவட்ட இணைய குற்றப்பிரிவு காவல் துறை சார்பில், சைபர் கிரைம் குறித்த விழிப்புணர்வுபேரணியை, மாவட்ட காவல் கண்காணிப்பாளர் ச.செல்வராஜ் கொடியசைத்து துவக்கி வைத்தார்.

அரியலூர் அண்ணா சிலையில் தொடங்கிய விழிப்புணர்வு பேரணி, சின்ன கடை தெரு, செந்துறை சாலை உள்ளிட்ட முக்கிய வீதிகள் வழியாக, அரியலூர் அரசு கலைக்கல்லூரியில் நிறைவடைந்தது.

பேரணியில் இணையதளத்தை கவனமாககையாள்வோம், பண ஆசைக்கு மயங்க வேண்டாம். அறிமுகம் இல்லாதவர்களிடமிருந்து வரக்கூடிய லிங்குகளை ஓபன் செய்ய வேண்டாம், பெண்கள் மற்றும் சிறுமிகளின் புகைப்படத்தை, இணையதளத்தில் பதிவிடுவதைதவிர்ப்போம் என்பது உள்ளிட்ட, பல்வேறு விழிப்புணர்வு வாசகங்கள் அடங்கிய பதாகைகளை கையில் ஏந்தியபடி கல்லூரி மாணவ, மாணவிகள் பேரணியாக சென்றனர்.

பேரணியில், கூடுதல் காவல் கண்காணிப்பாளர்கள் அந்தோணி ஆரி (இணைய குற்றப்பிரிவு), விஜயராகவன் (மதுவிலக்கு அமல் பிரிவு), அரியலூர் துணைக் காவல் கண்காணிப்பாளர் சங்கர் கணேஷ் அரியலூர் ஆய்வாளர் சந்திரமோகன், மற்றும் அரசு கலைக்கல்லூரி பேராசிரியர்கள், மாணவ, மாணவிகள் காவல்துறை அதிகாரிகள், காவலர்கள், என ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

PUDUGAI VARALARU – National Tamil Daily : Published by S.Sivasakthivel at Plot No.1103,Periyar Nagar, Rajagopalapuram Post,Pudukkottai-622003,TamilNadu State and Printed at V.C Printograph, 144,M.K Kottai Road, Elumalaiyan Rice Mill Complex, Ambigapuram, Ariyamangalam, Tiruchirappalli-620010, TamilNadu State. Editor: S.Sivasakthivel, Phone : 04322-261577, E.Mail: pudugaivaralaru@gmail.com.

வரலாறு விளையாட்டு

# ரோகித் சர்மா, ஜடேஜா அபார சதம் முதல் நாள் முடிவில் இந்தியா 326/5



**ராஜ்கோட் : பிப். 16,**

**இந்தியா, இங்கிலாந்து அணிகளுக்கு இடையிலான 3வது டெஸ்ட் கிரிக்கெட் போட்டி நேற்று குஜராத்தின் ராஜ்கோட்டில் தொடங்கியது. டாஸ் வென்ற இந்தியா பேட்டிங் தேர்வு செய்தது.**

முதலில் இந்திய அணி திணறியது. 33 ரன்கள் எடுப்பதற்குள் 3 விக்கெட்டுகளை இழந்து தத்தளித்தது. 4-வது விக்கெட்டுக்கு ரோகித் சர்மா உடன் ஜடேஜா ஜோடி சேர்ந்தார். இந்த ஜோடி பொறுப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தியது. சிறப்பாக ஆடி சதமத்த ரோகித் சர்மா 131 ரன்னில் ஆட்டமிழந்தார். அதேவேளையில் ஜடேஜா அரைசதம் கடந்தார். ரோகித் சர்மா-ஜடேஜா ஜோடி 204 ரன்கள் சேர்த்தது குறிப்பிடத்தக்கது.

அடுத்து களமிறங்கிய அறிமுக வீரர் சர்பராஸ் கான் தொடக்கம் முதலே அதிரடி ஆட்டத்தை வெளிப்படுத்தினார். அவர் 48 பந்தில் 7 பவுண்டரி, ஒரு சிக்சருடன் அரைசதம் அடித்தார். அவர் 62 ரன்னில் அவுட்டானார். மறுமுனையில் நிதானமாக ஆடிய ஜடேஜா 198 பந்தில் சதம் அடித்தார். டெஸ்ட் போட்டியில் ஜடேஜாவின் 4-வது சதம் இதுவாகும்.

இறுதியில், முதல் நாள் முடிவில் இந்தியா 5 விக்கெட் இழப்புக்கு 326 ரன்களை எடுத்துள்ளது. ஜடேஜா 110 ரன்னுடன் ஆட்டமிழக்காமல் உள்ளார். இங்கிலாந்து சார்பில் மார்க் வுட் 3 விக்கெட் வீழ்த்தினார்.

# ஆசிய கோப்பை பேட்மிண்டன்

## சீனாவை வீழ்த்தி இந்திய பெண்கள் அணி சாதனை



**மலேசியா : பிப். 16,**

**மலேசியாவில் நடைபெற்று வரும் ஆசிய ஓபன் சாம்பியன்ஷிப் பேட்மிண்டன் போட்டியில் இந்திய அணி 3-2 என்ற கணக்கில் சீன அணியை வீழ்த்தியுள்ளது.**

ஆசிய ஓபன் சாம்பியன்ஷிப் பேட்மிண்டன் போட்டிகள் மலேசியாவில் நடைபெற்று வருகிறது. இதில் குறைந்த அளவிலான அணிகள் மட்டுமே பங்கேற்க அனுமதி அளிக்கப்பட்டதால், இந்திய அணி சீனா அணியுடன் மோத வேண்டிய நிலை உருவானது. இதில் முதல் போட்டியில் பங்கேற்ற இந்தியாவின் நட்சத்திர வீராங்கனை பி.வி.சிந்து அவரை விட தரவரிசை பட்டியலில் முன்னணியில் உள்ள ஹேன் யூவை எதிர்கொண்டார்.

40 நிமிடங்கள் மட்டுமே நடைபெற்ற இந்த போட்டியில் அபாரமான ஆட்டத்தை வெளிப்படுத்திய சிந்து, 21-17, 21-15 என்ற செட் கணக்கில் வெற்றி பெற்று அசத்தினார். இதன் மூலம் இந்திய அணிக்கு அவர் 1-0 என்ற கணக்கில் முன்னிலை பெற்று தந்தார். கடந்த அக்டோபர் மாதம் ஏற்பட்ட காயம் காரணமாக போட்டிகளில் இருந்து விலகியிருந்த சிந்துவின் இந்த வெற்றி மூலம் அவர் மீண்டும் பார்முக்கு திரும்பியுள்ளதை உறுதிபடுத்தியுள்ளார்.

இதன் பிறகு நடைபெற்ற அடுத்த 3 போட்டிகளில் இந்தியாவின் தனிஷா காஸ்ட்ரோ, அஸ்வினி பொன்னப்பா, அஸ்மிதா சலிஹா ஆகியோர் அடுத்தடுத்து தோல்வி அடைந்தனர். இருந்தபோதும் பின்னர் வந்த ட்ரசா ஜாலி மற்றும் காயத்ரி கோபிச்சந்த ஆகியோர் சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தி இந்திய அணிக்கு மீண்டும் முன்னிலை பெற்று தந்தனர்.

இந்த தொடரை முடிவு செய்யும் பரபரப்பான இறுதி ஆட்டத்தில் இந்தியாவின் அன்மோல் கார்ப் சீனாவின் வூ லியோயூவை எதிர்கொண்டார். ஒரு மணி நேரம் 17 நிமிடங்கள் நடைபெற்ற பரபரப்பான போட்டியில் 22-20, 14-21, 21-18 என்ற செட் கணக்குகளில் வெற்றி பெற்று இந்திய அணிக்கு, அன்மோல் வெற்றி தேடித்தந்தார்.

இதன் மூலம் இந்திய அணி சீனாவிற்கு எதிரான போட்டியில் 3-2 என்ற கணக்கில் முன்னிலை பெற்று வெற்றி பெற்றது. இதனிடையே ஏற்கெனவே சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தியிருந்த இந்திய ஆண்கள் அணி, குரூப் 'ஏ'வின் லீக் போட்டியில் ஹாங்காங் அணியை எதிர்கொள்ள உள்ளது. இந்த தொடரில் துவக்கம் முதலே அசத்தி வரும் இந்திய அணி, இந்த போட்டியிலும் வெற்றி பெறும் என ரசிகர்கள் எதிர்பார்ப்பு தெரிவித்துள்ளனர்.

வரலாறு சினிமா

# "அனைத்து உயிர்களிடமும் அன்பு காட்டும் சிறந்த மனிதர் வெற்றி துரைசாமி" – வெற்றிமாறன் உருக்கம்



**சென்னை : பிப். 16,**

**"எப்போதும் சிரித்துக்கொண்டு, அன்புடன் பழகும் மனிதர். மனிதர்களுடன் மட்டுமல்லாமல், அனைத்து உயிர்களுடனும் அன்பாக இருக்கும் மனிதர். அவருடைய மறைவு ஏற்றுக்கொள்ள முடியாத இழப்பு" என இயக்குநர் வெற்றிமாறன் கண்ணீர் மல்க உருக்கமாக பேசியுள்ளார்.**

திரைப்பட இயக்குநர் வெற்றி துரைசாமியின் நினைவேந்தல் கூட்டம் சென்னையில் நடைபெற்றது. இதில் பேசிய இயக்குநர் வெற்றிமாறன், "வெற்றி துரைசாமி சினிமா தொடர்பான இடங்களில் தன்னை அறிமுகப்படுத்தும்போது, என்னுடைய மாணவர் என்று தான் அறிமுகம் செய்வார். என்னிடம் தான் சினிமா கற்றுக்கொண்டேன் என்பார். உண்மையில் நான் தான் அவரிடம் நிறைய கற்றுக்கொண்டேன். எனக்கு நிறைய விஷயங்களை அவர் சொல்லிக்கொடுத்தார். எங்கள் இருவருக்கும், பறவை, விலங்குகள் தொடர்பாக பொதுவான ஆர்வம் உண்டு. இதற்கான தேடல், பயணங்களில் ஆர்வம் கொண்டவர் வெற்றி. சிறந்த 'WildLifePhotographer'-க்கான விருதுகளையும் வாங்கியுள்ளார்.

அதன் தொடர்ச்சி தான் அவரின் சமீபத்திய பயணமும். பயணங்களில் ஆர்வம் கொண்ட சிறந்த புகைப்படக்காரர். கடந்த 10 ஆண்டுகளாக நான் என்ன செய்தாலும் அவரின் பங்களிப்பு அதில் ஏதேனும் ஒருவகையில் இருக்கும். அதனுடைய உச்சமாக தான் ஐஐஎஃப்சி என்ற பிலிம் இன்ஸ்டியூட்டுக்கு இடம் கொடுத்தார். அவர் முன்வரவில்லை என்றால் இன்னும் எத்தனை காலம் ஆகியிருக்கும் என தெரியவில்லை. யாருக்கும் இந்த மனது வராது. எப்போதும் உதவும் மனப்பான்மை உடையவர்களால் மட்டுமே இப்படி செய்ய முடியும். தொடர்ந்து தனது தந்தையின் மனிதநேய அறக்கட்டளையில் இயங்கிக் கொண்டிருந்தவர்.

எப்போதும் சிரித்துக்கொண்டு, அன்புடன் பழகும் மனிதர். மனிதர்களுடன் மட்டுமல்லாமல், அனைத்து உயிர்களுடனும் அன்பாக இருக்கும் மனிதர். அவருடைய மறைவு ஏற்றுக்கொள்ள முடியாத இழப்பு. மனம் ஏற்க மறுக்கிறது. காலம் அடிக்கடி இப்படியான சந்தர்பங்களில் நம்மை நிறுத்திவிடுகிறது. வெற்றிதுரைசாமி இரண்டாவது படத்துக்கு வேலை செய்துகொண்டிருந்தார்.

அவரின் நினைவாக, ஐஐஎஃப்சி சார்பாக முதல் திரைப்படம் இயக்குபவர்களுக்கு அவரது பெயரில் விருது வழங்கலாம் என பேசிக்கொண்டிருக்கிறோம். அவரின் பெயரில் WildLifePhotographer-க்கும் விருது வழங்கலாம் என்ற எண்ணம் உள்ளது. வாழ்க்கையில் நாம் நிறைய பேரை சந்திக்கிறோம். பேசுகிறோம். கடந்து போகிறோம். ஆனால், சிலரின் மறைவு தான் நம்மிடமிருந்து நம்மை எடுத்துச் சென்றுவிடுகிறது. அப்படி ஒன்றுதான் எனக்கு வெற்றி துரைசாமியின் மறைவு" என்றார்.

# இந்திய கிரிக்கெட் அணியில் அறிமுக வீரராக சர்ஃபராஸ் கான் : ஆனந்த கண்ணீரில் நெகிழ்ந்த தந்தை



**ராஜ்கோட் : பிப். 16,**

**இங்கிலாந்துக்கு எதிரான டெஸ்ட் போட்டியில் இந்திய கிரிக்கெட் அணியில் அறிமுக வீரராக சர்ஃபராஸ் கான் மற்றும் துருவ் ஜூரல் களமிறங்கியுள்ளனர்.**

ராஜ்கோட்டில் இந்தியா மற்றும் இங்கிலாந்து இடையேயான மூன்றாவது டெஸ்ட் போட்டி தொடங்கியுள்ளது. இதில் டாஸ் வென்ற இந்திய அணி பேட்டிங்கை தேர்வு செய்து விளையாடி வருகின்றது. இதனிடையே, இந்தப் போட்டியில் இந்தியா தரப்பில் சர்ஃபராஸ் கான் மற்றும் துருவ் ஜூரல் ஆகியோர் அறிமுக வீரர்களாக களமிறங்கினர். 26 வயதாகும் சர்ஃபராஸ் கான் கடந்த இரண்டு ஆண்டுகளாக இந்திய அணியில் இடம் பிடிக்க போராடி வந்தார். இத்தனைக்கும் ரஞ்சி ட்ராபி போன்ற உள்நாட்டு தொடர்களில் சிறப்பாக விளையாடியும் அவருக்கு இடம் கிடைக்கவில்லை.

சர்ஃபராஸ் கான், முதல்தர கிரிக்கெட்டில் 45 போட்டிகளில் விளையாடி, 69.85 சராசரி உடன் 3,912 ரன்கள் குவித்துள்ளார். இதில் 14 சதங்களும், 11 அரைசதங்களும் அடக்கம். இந்த நிலையில்தான் ஸ்ரேயஸ் ஐயர், விராட் கோலி மற்றும் கே.எல். ராகுல் ஆகிய மூவரும் டெஸ்ட் தொடரை தவறவிட்ட நிலையில் சர்ஃபராஸ் கானுக்கு வாய்ப்பு கிடைத்தது. அதன்படி, நேற்றைய போட்டியில் அறிமுக வீரராக களமிறங்கியுள்ளார்.

அவருக்கு இந்திய அணியின் முன்னாள் வீரர் அனில் கும்ப்ளே, டெஸ்ட் போட்டிக்கான தொப்பியை வழங்கினார். இந்த நிகழ்வை சர்ஃபராஸின் தந்தை நௌஷாத் கான் மற்றும் சர்ஃபராஸின் மனைவி ஆகியோர் ஆனந்த கண்ணீருடனும் நெகிழ்வுடனும் கண்டுகளித்தனர். அப்போது, தனது மகனின் முதல் தொப்பியை தனது கைகளில் எடுத்து முத்தமிட்ட சர்ஃபராஸின் தந்தை, மகனை ஆரத்தழுவினார். இந்த நெகிழ்ச்சியான சம்பவத்தின் வீடியோ காட்சிகள் இணையதளங்களில் வைரலாகி வருகின்றன. பலரும் சர்ஃபராஸ் கானுக்கு வாழ்த்து தெரிவித்து வருகின்றனர்.

# "15 வருடங்களில் முதல்முறையாக கேட்கிறார் காரணமில்லாமல் விடுப்பு கேட்பவர் அல்ல விராட் கோலி"– ஜெய் ஷா




**மும்பை : பிப். 16,**

**விராட் கோலி எந்த காரணமும் இல்லாமல் விடுப்பு எடுக்கும் வீரர் அல்ல என பிசிசிஐ செயலாளர் ஜெய் ஷா தெரிவித்துள்ளார்.**

இந்தியாவிற்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள இங்கிலாந்து கிரிக்கெட் அணி 5 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் விளையாடுகிறது. முதல் இரு போட்டிகள் முடிவடைந்த நிலையில் இங்கிலாந்து அணி முதல் போட்டியிலும், இந்திய அணி இரண்டாவது போட்டியிலும் வெற்றி பெற்றிருந்தது. இரு அணிகளுக்கு இடையிலான மூன்றாவது டெஸ்ட் போட்டி ராஜஸ்தானின் ராஜ்கோட் மைதானத்தில் நேற்று தொடங்கியுள்ளது. இதனிடையே இந்தப் போட்டியிலும் விராட் கோலி இடம்பெறாத நிலையில், அவரது விடுப்பு குறித்த உரையாடல் மீண்டும் பேசப்பட்டு வருகிறது. இது தொடர்பாக நேற்று முன்தினம் புதன்கிழமை பிசிசிஐ செயலாளர் ஜெய் ஷா பேசியிருந்தார்.

முன்னதாக, தனிப்பட்ட காரணங்களுக்காக விராட் கோலி முதல் இரு டெஸ்ட் போட்டிகளில் இருந்து விலகுவதாக பிசிசிஐ அறிவித்திருந்தது. அதே நேரத்தில், விராட் கோலிக்கு தனிப்பட்ட உரிமைக்கு மதிப்பளித்து, அதற்கான காரணங்களை யூகிக்க வேண்டாம் என ஊடகங்கள் மற்றும் ரசிகர்களை கேட்டுக்கொள்வதாகவும் பிசிசிஐ தனது அறிக்கையில் தெரிவித்திருந்தது. விராட் கோலிக்கு பதிலாக ரஜத் படிதார் அணியில் சேர்க்கப்பட்டிருந்தார்.

தொடர்ந்து விராட் கோலியின் விடுப்புக்கான காரணங்கள் குறித்து பலவிதமான கருத்துக்கள் வெளிவந்த வண்ணம் இருந்தன. இதற்கிடையில் வதந்திகளுக்கெல்லாம் முற்றுப்புள்ளி வைக்கும் நிலையில், விராட் கோலி மற்றும் அனுஷ்கா தம்பதி இருவரும் தங்களுடைய இரண்டாவது குழந்தையை எதிர்ப்பார்க்கின்றனர் என்று தெரிவித்திருந்த டி வில்லியர்ஸ், அடுத்த சில தினங்களில் கோலி குறித்த பொய்த்தகவலை பகிர்ந்துவிட்டேன் என வருத்தம் தெரிவித்தார். அதனால், என்ன காரணத்திற்காக விராட் கோலி விடுப்பில் இருக்கிறார் என்பது இதுவரை தெரியவில்லை.

இந்நிலையில், 3வது டெஸ்ட் போட்டிக்கு எப்படியும் திரும்பிவிடுவார் என ரசிகர்கள் நம்பிக்கொண்டிருந்த நிலையில், கடைசி 3 டெஸ்ட் போட்டிகளில் இருந்தும் விராட் கோலி விலகியிருப்பதாக பிசிசிஐ அறிவித்துள்ளது. கடந்த 2011ம் ஆண்டு ஜூன் மாதம் வெஸ்ட் இண்டீஸ் அணிக்கு எதிராக டெஸ்ட் போட்டியில் அறிமுகமான விராட் கோலி, அதற்கு பிறகான 13 வருட டெஸ்ட் கரியரில் ஒருமுறை கூட முழு டெஸ்ட் தொடரிலிருந்தும் விலகியதில்லை. அவர் இல்லாமல் விளையாடும் முதல் டெஸ்ட் தொடர் இதுதான்.

இந்நிலையில், பிசிசிஐ செயலாளர் ஜெய்ஷா ராஜ்கோட்டில் போட்டிக்கு முன்னதான செய்தியாளர் சந்திப்பில் பேசியபோது, "கோலி எந்த காரணமும் இல்லாமல் விடுப்பு கேட்கும் வீரர் அல்ல. 15 வருடங்களில் இல்லாமல் தற்போது தனிப்பட்ட விடுப்பு கேட்டால், அப்படிக் கேட்பது அவரது தனிப்பட்ட உரிமை. நாங்கள் எங்கள் வீரர்களை நம்புகிறோம். அவரை பாதுகாக்க விரும்புகிறோம். விராட் பற்றி பின்னர் பேசலாம்" என தெரிவித்துள்ளார்.

செய்தியாளர் சந்திப்பில் 2024 ஆம் ஆண்டுக்கான டி20 உலகக்கோப்பை கிரிக்கெட் தொடரில் இந்திய அணியின் கேப்டனாக ரோஹித் சர்மா செயல்படுவார் என்பதையும் உறுதிப்படுத்தினார். ஆல் ரவுண்டர் ஹர்திக் பாண்டியா துணைக் கேப்டனாக செயல்படுவார் என்றும் தெரிவித்தார்.

# சென்னையில் 40 ஆண்டு கால 'உதயம்' தியேட்டரின் அஸ்தமனம்



**சென்னை : பிப். 16,**

**சென்னை அசோக் நகருக்கு அடையாளமாக சொல்லப்படுவது அசோக் பில்லர். ஆனால், அதைத் தாண்டி அசோக நகரின் மற்றொரு பிரம்மாண்ட அடையாளமாக கடந்த 40 ஆண்டுகளாக நின்று கொண்டிருக்கும் உதயம் தியேட்டர் நிரந்தரமாக மூடப்படுகிறது.**

1983-ஆம் ஆண்டு தொடங்கப்பட்டு உதயம் திரையரங்கம், சென்னையில் மிக வெற்றிகரமாக செயல்பட்ட பெரிய திரையரங்கங்களில் ஒன்று. கட்டப்பட்டபோது உதயம், சூரியன், சந்திரன் ஆகிய மூன்று திரைகளை கொண்டிருந்தது. பின்னாட்களில் சொத்துப் பிரச்சினை காரணமாக உதயம் திரையரங்கு இரண்டாக பிரிக்கப்பட்டு, மினி உதயம் என்ற பெயரில் கூடுதலாக ஒரு திரை சேர்க்கப்பட்டது. மல்டிப்ளெக்ஸ் தியேட்டர்கள் பெரியளவில் கால் பதிக்காத காலக்கட்டத்தில் சென்னை ரசிகர்களின் ஆதர்ச திரையரங்கங்களில் ஒன்றாக 'உதயம்' திகழ்ந்தது.

உதயம் திரையரங்கில் முதலில் திரையிடப்பட்ட படம் ரஜினி நடித்த 'சிவப்பு சூரியன்'. 80-கள், 90-கள் தொடங்கி இன்று வரை ரஜினி, கமல், அஜித், விஜய் உள்ளிட்ட பெரிய ஹீரோக்கள் படங்களுக்கான முதல் நாள் முதல் காட்சி கொண்டாட்டங்களுக்கு பேர் போன ஒரு சில திரையரங்குகளில் உதயமும் ஒன்று. குறிப்பாக, 80-கள், தொண்ணூறுகளில் ரஜினிகாந்த் படங்கள் வெளியாகும் நாட்களில் சாலையின் ஓரம் வரை ரசிகர்கள் கூட்டம் அலைமோதி போக்குவரத்து பாதிப்பு ஏற்படும். ரஜினியின் 'படையப்பா', 'அருணாச்சலம்', 'பாட்ஷா' உள்ளிட்ட படங்கள் இங்கு ஒரே ஸ்க்ரீனில் 150 நாட்களை கடந்து ஓடியுள்ளன.

90-களுக்குப் பிறகு இந்த திரையரங்கம் விஜய், அஜித் ரசிகர்களின் கோட்டையாக மாறியது. 'கில்லி', 'அட்டகாசம்,' 'திருப்பாச்சி', 'வரலாறு', 'சிவகாசி' போன்ற படங்கள் இங்கு வெள்ளி விழா கண்டன. அதேபோல சென்னையில் நல்ல வசூல் ஆவர்த்தனம் நடக்கும் திரையரங்குகளில் ஒன்றாகவும் உதயம் விளங்கியது.

சென்னையில் மல்டிப்ளெக்ஸ் கலாச்சாரம் தலைதூக்கிய பிறகு மெல்ல உதயம் போன்ற திரையரங்கங்களின் மவுசு குறையத் தொடங்கியது. பல்வேறு சட்ட சிக்கல்களால் 2008 வரை நீதிமன்றத்தின் கட்டுப்பாட்டில் இயங்கிக் கொண்டிருந்த உதயம் தியேட்டரை 2009-ஆம் ஆண்டு ஐந்து உரிமையாளர்களில் ஒருவரான பரமசிவம் பிள்ளை, ரூ.80 கோடி ஏலத்தில் வாங்கியிருந்தார். அன்று முதல் கடந்த 15 ஆண்டுகளாக 'இப்போது விற்கப்படுகிறது, நாளை விற்கப்படுகிறது' என்று வதந்திகள் அவ்வப்போது கிளம்பினாலும், இந்த முறை அது உண்மையாகிஇருக்கிறது.

பிரபல கட்டுமான நிறுவனம் ஒன்று, 1.3 ஏக்கர் பரப்பளவு கொண்ட உதயம் தியேட்டர் இடத்தை வாங்கியிருப்பதாகவும், விரைவில் அங்கு 25 தளங்களைக் கொண்ட அடுக்குமாடி குடியிருப்பு வர இருப்பதாகவும் தகவல் வெளியாகியுள்ளது சென்னை சினிமா ரசிகர்கள் மத்தியில் சோகத்தை ஏற்படுத்தியுள்ளது. பலரும் தங்கள் சமூகவலைதள பக்கங்களில் உதயம் திரையரங்குடனான தங்களது நினைவுகளை பகிர்ந்து வருகின்றனர்.

கொரோனா பரவலுக்குப் பிறகு தமிழகத்தின் அடையாளமாக இருந்த பல்வேறு திரையரங்குகள் மூடப்பட்டுவிட்டன. அதிலும் ஓடிடி தளங்களின் வருகைக்குப் பிறகு பார்வையாளர்கள் திரையரங்குகளுக்குச் சென்று படம் பார்க்கும் போக்கு குறைந்துவிட்டதால் பல திரையரங்கங்களின் நிலை பரிதாபகரமாக உள்ளது. சென்னையில் ஒரு காலத்தில் ரசிகர்களின் ஆதர்ச தியேட்டர்களாக இருந்த சாந்தி, அகஸ்தியா போன்ற பிரபல திரையரங்குகள் இன்று காணாமல் போய்விட்டன. அந்த வரிசையில் தற்போது உதயமும் இணைகின்றது.

40 ஆண்டு காலமாக சென்னை சினிமா கலாச்சாரத்தின் ஓர் அங்கமாக, எண்ணற்ற நினைவுகளை சுமந்து நிற்கும் 'உதயம்' திரையரங்கம் அஸ்தமனம் ஆகப் போவதாக வரும் செய்தி சினிமா ரசிகர்களின் நெஞ்சை கனக்கச் செய்துள்ளது.

# 'சாட்டை' ஹீரோ யுவனுக்கு நடந்த கோலாகல திருமணம் : பிரபலங்கள் வாழ்த்து



**சென்னை : பிப். 16,**

**அன்பழகன் இயக்கத்தில் உருவான 'சாட்டை' படம் மூலம் சினிமாவில் பிரபலமானவர் நடிகர் யுவன். இவருக்கு நடைபெற்ற திருமணத்தில் திரையுலக, அரசியல் பிரபலங்கள் கலந்து கொண்டு வாழ்த்துகளைத் தெரிவித்துள்ளனர்.**

'சாட்டை', 'அடுத்தசாட்டை', 'கமர்கட்டு', 'கீரிப்புள்ள', 'இளமி அய்யனார் வீதி' போன்ற பல படங்களில் கதாநாயகனாக நடித்தவர் யுவன் என்ற அஜ்மல் கான். இவருடைய தந்தை பிரோஸ் கான் ஒரு தொழிலதிபர். இவரும் பல படங்களில் குணச்சித்திர வேடங்களில் நடித்தவர் .

நடிகர் யுவன் என்ற அஜ்மல் கானுக்கும், கும்பகோணம் தங்க விலாஸ் அதிபர் சாதிக் அலி மகள் ரமீசா கஹானிக்கும் நிக்கா மற்றும் வரவேற்பு நிகழ்ச்சி நடந்தேறியது. இந்நிகழ்ச்சி விஜிபி ரீசார்ட்டில் மிகப்பிரம்மாண்டமான மேடை அமைத்து அதில் திரளான மக்கள் முன்னணியில் நடைபெற்றது .

இந்த திருமண விழாவில் ஏராளமான அரசியல் பிரமுகர்கள், திரை நட்சத்திரங்கள் மற்றும் தொழில் அதிபர்கள் என ஏராளமானோர் கலந்து கொண்டனர். இதில் தமிழ் மாநில காங்கிரஸ் தலைவர் ஜி.கே.வாசன், நாம்தமிழர் கட்சி தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமான் மற்றும் திரையுலக பிரமுகர்கள் மன்சூர் அலிகான், ரியாஸ்கான், உமாரியாஸ்கான் இசையமைப்பாளர் ஸ்ரீகாந்த் தேவா, மிஸ் இந்தியா சினேகா மற்றும் தொழிலதிபர்கள் பலர் கலந்து கொண்டு மணமக்களை வாழ்த்தினர்.

'சாட்டை', 'அடுத்த சாட்டை' போன்ற 15-க்கும் மேற்பட்டப் படங்களில் நடித்திருந்தாலும் கொரோனா உள்ளிட்ட சில காரணங்களால் சினிமாவுக்கு பிரேக் விட்டிருந்தார். கொரோனா சமயத்தில் ஈசிஆர் பகுதியில் ஓட்டல் ஒன்றையும் ஆரம்பித்து அதை வெற்றிகரமாக நடத்தி வருகிறார். யுவனின் திருமணத்திற்கு ரசிகர்கள் தங்களது வாழ்த்துகளைச் சொல்லி வருகின்றனர்.

# "35 ஆண்டுகளுக்குப் பிறகு இந்தியில் நடிக்கிறேன்" – குஷ்பு நெகிழ்ச்சி



**மும்பை : பிப். 16,**

**"35 ஆண்டுகளுக்குப் இந்தியில் மீண்டும் நடிப்பது மகிழ்ச்சி அளிக்கிறது" என நடிகையும், தேசிய மகளிர் ஆணைய உறுப்பினருமான குஷ்பு சுந்தர் தெரிவித்துள்ளார்.**

நடிகை குஷ்பு தற்போது பாலிவுட் படம் ஒன்றில் நடிக்க ஒப்பந்தமாகியுள்ளார். 'ஜர்னி' என பெயரிடப்பட்டுள்ள இப்படத்தை 'கதர் 2' படத்தை இயக்கிய அனில் ஷர்மா இயக்குகிறார். இப்படத்தில் நானா படேகர் முக்கிய கதாபாத்திரத்தில் நடிக்கிறார். இந்நிலையில், 35 வருடங்களுக்குப் பிறகு மீண்டும் பாலிவுட் திரும்பியுள்ளது மகிழ்ச்சியளிப்பதாக நடிகை குஷ்பூ தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் பேட்டி ஒன்றில், "நான் இந்தி படத்தில் நடித்து 35 ஆண்டுகளாகிவிட்டன. 'ப்ரேம் தான்' படத்தின் படப்பிடிப்பு 1989-ல் நிறைவடைந்தது. இப்போது நான் முற்றிலும் புதியவராக உணர்கிறேன். நானா படேகருடன் இணைந்து நடிப்பது உற்சாகமளிக்கிறது.

அவர் மிகப்பெரிய நடிகர் என்பது அனைவருக்கும் தெரியும். அப்போது நான் தென்னிந்திய திரைப்படங்களில் பிஸியாக இருந்ததால் என்னால் இந்திப் படங்களில் நடிக்க முடியவில்லை. அழுத்தமான கதாபாத்திரம் கொண்ட ஒரு படத்துடன் இந்தியில் மீண்டும் நடிப்பதை முக்கியமாக கருதுகிறேன்" என்றார்.

**வரலாறு உலகம்**

# 60 வயதில் காதலியை கரம் பிடிக்கிறார்
## ஆஸ்திரேலிய பிரதமர் அந்தோணி அல்பானீசு



**சிட்னி : பிப். 16,**

**பதவியில் இருக்கும்போது, திருமண நிச்சயம் நடந்த முதல் பிரதமர் ஆவார் என அந்நாட்டு ஊடகங்கள் தெரிவிக்கின்றன.**

ஆஸ்திரேலிய பிரதமராக இருப்பவர் அந்தோணி அல்பானீசு. இவரது நீண்டநாள் காதலியான ஜோடீ ஹெய்டன் என்பவரை திருமணம் செய்து கொள்ளும் முடிவை அவர் நேற்று வெளியிட்டு உள்ளார். அவர்கள் இருவருக்கும் இடையே திருமண நிச்சயம் நடந்துள்ளது.

கடந்த 2020-ம் ஆண்டு தொடக்கத்தில் மெல்போர்ன் நகரில் நடந்த விருந்து நிகழ்ச்சி ஒன்றில் முதன்முறையாக ஹெய்டனை, அல்பானீசு சந்தித்து பேசினார். இதன்பின்னர், 2022-ம் ஆண்டு நடந்த பொது தேர்தலின் போது, பிரசாரத்தில் அவருடன் அல்பானீசு ஒன்றாக சென்று வாக்கு சேகரிப்பில் ஈடுபட்டார்.

அல்பானீசு பிரதமரான பின்னர் துபாய், மேட்ரிட், பாரீஸ், லண்டன் மற்றும் புதுடெல்லி உள்ளிட்ட நகரங்களுக்கு செல்லும்போது அவருடன் ஒன்றாக ஹெய்டன் சென்றுள்ளார். இங்கிலாந்து நாட்டின் ராணி 2-ம் எலிசபெத்தின் மறைவின்போதும், அமெரிக்க அதிபர் ஜோ பைடன் வெள்ளை மாளிகையில் அளித்த விருந்து நிகழ்ச்சி உள்ளிட்ட முக்கிய நிகழ்வுகளிலும் இருவரும் ஒன்றாக பங்கேற்றனர்.

இந்த தேர்தலில் அவர் வெற்றியும் பெற்றார். பதவியில் இருக்கும்போது, திருமண நிச்சயம் நடந்த முதல் பிரதமர் ஆவார் என அந்நாட்டு ஊடகங்கள் தெரிவிக்கின்றன. இதுபற்றி செல்பி புகைப்படம் ஒன்றையும் அவருடைய சமூக ஊடக தளங்களில் பகிர்ந்து கொண்டார். அதில், ஹெய்டன் சரி என்று கூறினாள் என தலைப்பிட்டு உள்ளார். ஹெய்டன் பெண்களுக்கான வழக்கறிஞராக உள்ளார். அல்பானீசுக்கு முதல் திருமணத்தின் வழியே நாதன் அல்பானீசு என்ற மகன் ஒருவர் உள்ளார்.

# அமெரிக்காவில் வெற்றி பேரணியில் நடந்த துப்பாக்கி சூட்டில் ஒருவர் பலி



**மிசவுரி : பிப். 16,**

**வெற்றி கொண்டாட்டத்திற்கான பேரணி, யூனியன் ஸ்டேசன் பகுதியில் வந்தபோது, திடீரென கூட்டத்தில் துப்பாக்கி சூடு நடத்தப்பட்டு உள்ளது.**

அமெரிக்காவில் சமீபத்தில் நடந்த ரக்பி விளையாட்டுக்கான சூப்பர் பவுல் சாம்பியன்ஸ் போட்டியில், கன்சாஸ் சிட்டி அணி பட்டம் வென்றது. இந்த வெற்றியை கொண்டாடுவது என ரசிகர்கள் முடிவு செய்தனர். இதற்காக மிசவுரி மாகாணத்தில் கன்சாஸ் நகரில் உள்ள தெருக்களில் அவர்கள் ஒரு பேரணியாக சென்றனர். இதனை தொடர்ந்து, 600 போலீசார் வரை பாதுகாப்புக்காக குவிக்கப்பட்டனர்.

இந்த பேரணியில், ஆண்கள், பெண்கள் என ரசிகர்கள் ஆயிரக்கணக்கானோர் திரண்டனர். அப்போது, யூனியன் ஸ்டேசன் பகுதியில் பேரணி வந்தபோது, திடீரென கூட்டத்தில் துப்பாக்கி சூடு நடத்தப்பட்டு உள்ளது. இதனால், பேரணியில் திரண்டிருந்த பெண்கள் உள்ளிட்ட பலரும் அலறியடித்து ஓடினர்.

இந்த சம்பவத்தில் ஒருவர் உயிரிழந்து உள்ளார். 21 பேர் காயம் அடைந்தனர். அவர்களில் 3 பேரின் நிலைமை கவலைக்குரிய வகையில் உள்ளது. ஆயுதங்களுடன் சுற்றி திரிந்த 2 பேரை போலீசார் கைது செய்தனர். அவர்களிடம் விசாரணை நடந்து வருகிறது.

கென்சாஸ் கவர்னர் லாரா கெல்லி போலீசாரால் பாதுகாப்பாக வேறிடத்திற்கு கொண்டு செல்லப்பட்டார். அவர் எக்ஸ் வலைதளத்தில் வெளியிட்ட பதிவில், கன்சாஸ் நகர போலீசார் கூறும் அறிவுரைகளை மக்கள் பின்பற்றும்படியும், அதற்கேற்ப நடந்து கொள்ள வேண்டும் என்றும் அறிவுறுத்தி உள்ளார்.

# புற்றுநோய்க்கு எதிராக விரைவில் தடுப்பூசி
## விளாடிமிர் புதின் அறிவிப்பு



**ரஷியா : பிப். 16,**

**உலகெங்கும் மனிதகுலத்தை அச்சுறுத்தும் நோய்களில் ஒன்று புற்றுநோய் எனப்படும் "கேன்சர்".**

உலகம் முழுவதும் அரசு-சாரா மற்றும் அரசு-சாரா பல அமைப்புகள் கேன்சருக்கு தடுப்பூசி கண்டுபிடிக்கும் முயற்சியில் பல கோடிகளை செலவழித்து தீவிர ஆராய்ச்சியில் ஈடுபட்டு வருகின்றன. கடந்த வருடம், இங்கிலாந்து அரசு, ஜெர்மனி நாட்டை அடிப்படையாக கொண்ட பயோஎன்டெக் எனும் நிறுவனத்துடன், 2030க்குள் 10 ஆயிரம் நோயாளிகள் பயன்படும் வகையில் கேன்சர் மருத்துவ ஆராய்ச்சி செய்து கொள்ள ஒரு ஒப்பந்தம் செய்து கொண்டது.

இந்நிலையில், ரஷிய அதிபர் விளாடிமிர் புதின், எதிர்கால தொழில்நுட்பம் குறித்து ரஷிய தலைநகர் மாஸ்கோவில் உரையாற்றினார். அதில் ரஷிய ஆராய்ச்சியாளர்கள் கேன்சருக்கான மருந்து கண்டுபிடிப்பில் அடைந்துள்ள முன்னேற்றம் குறித்து பேசினார்.

அப்போது அவர் அறிவித்ததாவது: எங்கள் ஆராய்ச்சியாளர்கள் கேன்சருக்கான தடுப்பூசியை கண்டுபிடிக்கும் முயற்சியில் வெற்றியை நெருங்கி விட்டார்கள். தனிப்பட்ட வகையில் நோயாளிகளுக்கு பயன்படும் வகையில் அவை பொதுபயன்பாட்டுக்கு விரைவில் வரும் என நம்புகிறேன் என்று புதின் தெரிவித்தார்.

எந்த வகை புற்று நோயை தடுக்க இந்த தடுப்பூசி செயல்படும் என்பதையும், எவ்வாறு நோயாளிகளின் உடலில் செயல்படும் எனும் விவரங்களையும் புதின் தெரிவிக்கவில்லை. ஹ்யூமன் பேபிலோமாவைரஸ் எனப்படும் வைரஸ் தாக்குதல் மூலம் பலவகையான கேன்சர் நோய் உருவாவதாக உலக சுகாதார அமைப்பு தெரிவித்திருந்தது.

இந்த ஹெச்.பி.வி. தாக்குதலுக்கு எதிராக தற்போது 6 உரிமம் பெற்ற தடுப்பூசிகள் உள்ளன. கோவிட்-19 பெருந்தொற்று காலகட்டத்தில் கொரோனா வைரசுக்கு எதிராக ரஷியா "ஸ்புட்னிக்" எனும் தடுப்பூசியை கண்டுபிடித்து அயல்நாடுகளுக்கும் ஏற்றுமதி செய்தது குறிப்பிடத்தக்கது.

# அமெரிக்காவில் திடீரென மருத்துவமனைக்குள் புகுந்து மோதிய கார் விபத்தில் ஒருவர் பலி



**ஆஸ்டின் : பிப். 16,**

**காரை ஓட்டி வந்த பெண் மிச்செல்லே ஹாலேவே என அடையாளம் காணப்பட்டார்.**

அமெரிக்காவின் டெக்சாஸ் மாகாணத்தில் ஆஸ்டின் நகரில் மருத்துவமனை ஒன்றின் அவசரகால அறைக்குள் கார் ஒன்று திடீரென புகுந்தது. அந்த அவசரகால அறையின் காத்திருப்பு அறையில் இருந்தவர்கள் மீது மோதியது.

இந்த சம்பவத்தில் முதியவர்கள் 3 பேர் மற்றும் 2 இளைஞர்கள் என 5 பேர் படுகாயமடைந்தனர். அவர்கள் சிகிச்சைக்காக கொண்டு செல்லப்பட்டனர். காரை ஓட்டி வந்த பெண் மிச்செல்லே ஹாலேவே (வயது 57) என அடையாளம் காணப்பட்டார். அவர் காரிலேயே காயத்துடன் கிடந்துள்ளார். அவருக்கு உடனடியாக சி.பி.ஆர். சிகிச்சை அளிக்கப்பட்டது. எனினும், அதில் பலனின்றி அவர் உயிரிழந்து விட்டார்.

அந்த மருத்துவமனையில் இருந்த ஊழியர்கள் உயிரை பணயம் வைத்து காரை நிறுத்த முற்பட்டனர். இதனால், பெரிய அளவிலான சேதம் தவிர்க்கப்பட்டது. இது உள்நோக்கம் கொண்டது இல்லை என வடக்கு ஆஸ்டின் போலீசார் தெரிவித்தனர். ஆஸ்டினில் நடப்பு ஆண்டில் நடந்த 7-வது கொடிய விபத்து சம்பவம் இதுவாகும். இதில் 7 பேர் வரை உயிரிழந்து உள்ளனர்.

# அமெரிக்க ராணுவ அதிகாரிகளுடன்
## இந்திய ராணுவ தளபதி உயர்மட்ட ஆலோசனை



**புளோரிடா : பிப். 16,**

**இந்திய ராணுவ தளபதி மனோஜ் பாண்டே 4 நாள் பயணமாக அமெரிக்கா சென்றார்.**

இந்திய ராணுவ தளபதி மனோஜ் பாண்டே 4 நாள் பயணமாக கடந்த 11-ந் தேதி அமெரிக்கா சென்றார். பல ஆண்டுகளுக்கு பிறகு அமெரிக்கா செல்லும் இந்திய ராணுவ தளபதி மனோஜ் பாண்டே ஆவார். அங்கு பல்வேறு நிகழ்ச்சிகளில் அவர் கலந்துகொண்டார்.

இந்த பயணத்தின் முக்கிய அம்சமாக புளோரிடாவில் நேற்று அமெரிக்க ராணுவ தளபதி ராண்டி ஜார்ஜ் மற்றும் பிற மூத்த ராணுவ அதிகாரிகளை மனோஜ் பாண்டே சந்தித்து பேசினார். அப்போது இரு நாட்டு ராணுவ ஒத்துழைப்பு, உலகளாவிய அமைதி மற்றும் உறவுகளை மேலும் வலுப்படுத்துவது குறித்து உயர்மட்ட ஆலோசனை நடத்தினார். இதனை இந்திய இராணுவத்தின் பொதுத் தகவல் கூடுதல் இயக்குநரகம் தனது அதிகாரப்பூர்வ எக்ஸ் சமூகவலைதளத்தில் தெரிவித்துள்ளது.

# உலகின் 3-வது பெரிய பொருளாதாரம் எனும் தகுதியை
## ஜெர்மனியிடம் இழந்தது ஜப்பான்



**டோக்கியோ : பிப். 16,**

**உலகின் 3-வது பெரிய பொருளாதாரமாக விளங்கிய ஜப்பான், அந்நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதார மந்தநிலை காரணமாக தனது அந்த நிலையை ஜெர்மனியிடம் இழந்துள்ளது.**

உலகின் முதல் மிகப் பெரிய பொருளாதாரமாக அமெரிக்காவும், இரண்டாவது பெரிய பொருளாதாரமாக சீனாவும் உள்ளன. மூன்றாவது பெரிய பொருளாதாரமாக ஜப்பானும், நான்காவது பெரிய பொருளாதாரமாக ஜெர்மனியும் இருந்தன. இந்நிலையில், ஜப்பானில் ஏற்பட்டுள்ள பொருளாதார மந்தநிலை காரணமாக 3-வது இடத்தை ஜப்பான் இழந்துள்ளது.

ஜப்பான் நேற்று வெளியிட்ட அறிவிப்பில், "தொடர்ச்சியாக இரண்டு காலாண்டுகளில் ஜப்பானின் பொருளாதாரம் சுருங்கியுள்ளது. மூன்றாம் காலாண்டில் ஜப்பானின் மொத்த உள்நாட்டு உற்பத்தி 3.3 சதவீதமாக சுருங்கியுள்ளது. ஆண்டு சராசரியாக 0.4 சதவீதம் வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது" எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

2023-ல், ஜப்பானின் மொத்த உள்நாட்டு உற்பத்தி 591.48 டிரில்லியன் யென் (4.2 டிரில்லியன் டாலர்) ஆக உள்ளது. சராசரி வளர்ச்சி 5.7 ஆக மதிப்பிடப்பட்டுள்ளது. மறுபுறம் ஜெர்மனியின் மொத்த உள்நாட்டு உற்பத்தி 6.3% ஆக வளர்ச்சி கண்டுள்ளது. இது 4.12 டிரில்லியன் யூரோக்கள் (4.46 டிரில்லியன் டாலர்) ஆக உள்ளது.

ஜப்பானில் ஏற்பட்டுள்ள பொருளாதார மந்தநிலை காரணமாக அந்நாட்டில் உணவு, எரிபொருள் உள்ளிட்டவற்றின் விலை உயர்ந்து, அவற்றின் நுகர்வு 0.2 சதவீதம் குறைந்துள்ளது. ஜப்பானின் எரிபொருள் தேவையில் 94 சதவீதம் இறக்குமதி செய்யப்படுகிறது.

இதேபோல், உணவுத் தேவையில் 63 சதவீதம் இறக்குமதி செய்யப்படுகிறது. உள்நாட்டில் நுகர்வு குறைந்துள்ளதோடு, இறக்குமதிக்கான செலவு கூடி இருப்பதன் காரணமாக பொருளாதாரத்தில் மந்தநிலை நிலவுவதாக டோக்கியோவை தலைமையிடமாகக் கொண்ட ஜப்பான் மேக்ரோ எனும் உத்திகளை வகுக்கும் நிறுவனம் தெரிவித்துள்ளது.

ஜப்பானில் கடந்த ஜனவரியில் கடலுக்கு அடியில் ஏற்பட்ட நிலநடுக்கம், அதன் பொருளாதார மந்தநிலைக்கு முக்கிய காரணம் என தெரிவித்துள்ள நியூமேன் நிறுவனம், இயற்கை பேரிடர் காரணமாக மக்கள் செலவு செய்வதை நிறுத்திக்கொண்டார்கள் என கூறியுள்ளது. தனிநபர்களின் நுகர்வு குறைந்துள்ளதோடு, சந்தை எதிர்பார்ப்பும் தட்டையாகவே உள்ளதாகவும் அது குறிப்பிட்டுள்ளது.

# ஒரே நேரத்தில் 20 ஸ்மார்ட் போன்களை பயன்படுத்துகிறார் சுந்தர் பிச்சை



**அமெரிக்கா : பிப். 16,**

**ஒருவர் ஒரு ஸ்மார்ட் போனை பயன்படுத்தவே படாத பாடு படும் நிலையில், கூகுள் நிறுவனத்தின் சிஇஓ சுந்தர் பிச்சை, ஒரே சமயத்தில் 20 ஸ்மார்ட் போன்கள் பயன்படுத்துவதாகக் கூறி ஆச்சரியப்பட வைத்துள்ளார்.**

தமிழகத்தைச் சேர்ந்த சுந்தர் பிச்சை, கூகுள் நிறுவனத்தின் தலைமை செயல் அதிகாரியாக இருக்கிறார். சமீபத்தில் நேர்காணல் ஒன்றில் கலந்து கொண்ட அவர், டெக் பழக்கம், குழந்தை வளர்ப்பு, ஏஐ உள்ளிட்ட விஷயங்கள் குறித்து பல விஷயங்களைப் பகிர்ந்து கொண்டார்.

அப்போதுதான், ஒரே சமயத்தில் தான் 20 ஸ்மார்ட் போன்களை பயன்படுத்தும் ரகசியத்தையும் சொல்லி ஆச்சரியப்பட வைத்தார். ஒரே நேரத்தில் இத்தனை செல்போன்களை பயன்படுத்துவதற்கான காரணத்தை விளக்கிய சுந்தர் பிச்சை, "பணி நிமித்தமாக இத்தனை ஸ்மார்ட்போன்களை பயன்படுத்த வேண்டி இருக்கிறது. பல்வேறு சாதனங்களில் கூகுள் புராடெக்ட்களின் இயக்கம் எப்படி என்பதை சோதிக்கவும், அப்டேட்டில் இருக்கவும் இதைத் தொடர்ந்து செய்து வருகிறேன். இப்படி செயல்பட்டால்தான், பொதுமக்கள் விரும்பும் புத்தம்புதிய அம்சங்களை கூகுள் நிறுவனத்தால் கொடுக்க முடியும்" என்று சொன்னார்.

இந்த நேர்காணலில் குழந்தை வளர்ப்பு குறித்தும் பேசிய அவர், "குழந்தைகள் அதிகநேரம் செல்போன் பயன்டுத்துவதை கண்டிக்காமல், கட்டுப்படுத்தும் விதத்தில் பெற்றோர்களின் அணுகுமுறை இருக்க வேண்டும். எவ்வளவு நேரம் செல்போன் பார்க்கிறார்கள் என்பதை பெற்றோர்கள் கண்டிப்பாக கண்காணிக்க வேண்டும். இந்த விஷயத்தைப் பொறுத்தவரை குழந்தைகளை அவர்கள் போக்கில் விடக்கூடாது" என்று சொன்னார்.

ஏஐ தொழில்நுட்பத்தின் வளர்ச்சி குறித்தும் பேசிய சுந்தர் பிச்சை, "மனிதன் உறுவாக்கிய மிக முக்கிய தொழில்நுட்பமாக ஏஐ இருக்கும். எப்படி நெருப்பும், மின்சாரமும் மனித வாழ்வில் தாக்கத்தை ஏற்படுத்தியதோ அது போன்ற தாக்கத்தை ஏஐ நிச்சயமாக ஏற்படுத்தும்" என்றார்.

# இந்தோனேசிய அதிபர் தேர்தலில் பிரபோவோ வெற்றி



**இந்தோனேசியா : பிப். 16,**


**இந்தோனேசியாவில் நேற்று முன்தினம் புதன்கிழமை அதிபர் தேர்தல் நடந்து முடிந்தது. இதில் பாதுகாப்பு மந்திரி பிரபோவோ சுபியாண்டோ முன்னாள் மாகாண கவர்னர்கள் அனீஸ் பஸ்வேடன், கஞ்சர் பிரனோவோ ஆகியோர் இடையே போட்டி நிலவியது.**

வாக்குப்பதிவு முடிந்ததும் உடனே ஓட்டு எண்ணிக்கை தொடங்கியது. இதில் பிரபோவோ சுபியாண்டே தொடர்ந்து முன்னிலை வகித்தார். இந்நிலையில் அதிபர் தேர்தலில் பிரபோவோ 57 முதல் 59 சதவீதம் வரை வாக்குகள் பெற்றுள்ளதாக தகவல் வெளியாகி உள்ளது.

இதன்மூலம் அவர் தேர்தலில் வெற்றி பெற்று உள்ளார். அதே வேளையில் தேர்தல் முடிவு இன்னும் அதிகாரப்பூர்வமாக அறிவிக்கப்படவில்லை.

இதற்கிடையே தலைநகர் ஜகார்த்தாவில் உள்ள விளையாட்டு அரங்கத்தில் ஆயிரக்கணக்கான ஆதரவாளர்கள் மத்தியில் பேசிய பிரபோவோ, தனது வெற்றி அனைத்து இந்தோனேசியர்களின் வெற்றியாகும் என்றார்.

# டிரம்பை விட பைடன் அதிபராவதையே விரும்புகிறோம் – விளாடிமிர் புதின்



**ரஷியா : பிப். 16,**

**உலகிலேயே பெரிய வல்லரசு நாடான அமெரிக்காவில், இவ்வருட நவம்பர் மாதம், அதிபர் தேர்தல் நடைபெறவுள்ளது.**

இம்முறை, ஜனநாயக கட்சியை சேர்ந்த தற்போதைய அதிபர் ஜோ பைடன், குடியரசு கட்சியை சேர்ந்த முன்னாள் அதிபர் டொனால்ட் டிரம்ப் ஆகிய இருவரும் ஒருவரையொருவர் எதிர்த்து தீவிரமாக களமிறங்கி உள்ளனர். அயல்நாடுகளுடன் உள்ள அமெரிக்காவின் உறவு நிலை குறித்து அதிபர் பைடனும், டிரம்பும் நேரெதிர் சித்தாந்தங்களை உடையவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.


இந்நிலையில், மற்றொரு வல்லரசு நாடான ரஷியாவின் அதிபர் விளாடிமிர் புதின், அந்நாட்டின் தொலைக்காட்சிக்கு பேட்டியளித்தார். அதில் அமெரிக்காவில் நடைபெறவுள்ள தேர்தல் மற்றும் அதிபர் வேட்பாளர்கள் குறித்து அவரிடம் கேட்கப்பட்டது.

அதற்கு புதின் பதிலளித்ததாவது: இரண்டாம் முறையாக டொனால்ட் டிரம்ப் அதிபராவதைவிட ஜோ பைடன் வருவதையே ரஷியா விரும்பும். பைடன் நீண்ட அனுபவம் உடையவர் மட்டுமல்ல; அவர் நடவடிக்கைகள் எளிதில் யூகிக்க கூடியவை. அவர் அந்த காலத்து அரசியல் சிந்தனைகள் மற்றும் நடவடிக்கைகள் கொண்டவர். ஆனால், டொனால்ட் டிரம்ப் அவ்வாறு அல்ல; டிரம்பை பிறரால் புரிந்து கொள்ளவோ அல்லது அவரது நடவடிக்கைகளை யூகிக்கவோ முடியாது.

இருப்பினும், அமெரிக்காவில் யார் அதிபராக பதவி ஏற்றாலும் அவர்களுடன் ரஷியா இணைந்து பணியாற்ற முடியும். நேட்டோவில் அமெரிக்காவின் ஈடுபாடு குறித்து டிரம்ப் கொண்டிருக்கும் சிந்தனைகளில் நியாயம் உள்ளது. ஆனால், முடிவு செய்ய வேண்டியது அமெரிக்காவின் பொறுப்பு.

பைடனின் உடல்நலம் குறித்து கருத்து தெரிவிக்க நான் டாக்டர் அல்ல. அவரது உடலாரோக்கியம் குறித்து நான் பேசுவது முறையாக இருக்காது. 2021ல் சுவிட்சர்லாந்து நாட்டில் பைடனை நான் சந்தித்த போது அவர் நலமாகத்தான் இருந்தார் என்று புதின் கூறினார்.

# அமெரிக்காவில் 2 ஆண்டுகளில் இல்லாத அளவு பனிப்பொழிவு : 1,000 விமானங்கள் ரத்து



**நியூயார்க் : பிப். 16,**

**பயங்கர பனிப்பொழிவு காரணமாக வெப்பநிலை மைனஸ் 30 டிகிரியை கடந்தது.**

அமெரிக்காவில் இந்த ஆண்டு தொடக்கத்தில் இருந்தே பனிப்பொழிவு நிலவி வருகிறது. இந்தநிலையில் நாட்டின் வடகிழக்கு மாகாணங்களில் பனிப்புயல் உருவாகி வலுப்பெற்றது. இதனால் முக்கிய நகரங்களான நியூயார்க், பாஸ்டன், நியூபோர்ட் போன்றவற்றில் அவசர நிலை பிறப்பிக்கப்பட்டது.

இந்த நிலையில் கடந்த 2 ஆண்டுகளில் இல்லாத வகையில் அங்கு கடுமையான பனிப்பொழிவு ஏற்பட்டுள்ளது. இந்த பயங்கர பனிப்பொழிவு காரணமாக வெப்பநிலை மைனஸ் 30 டிகிரியை கடந்தது. இதனால் முக்கிய நகரங்களில் விமான போக்குவரத்து பாதிக்கப்பட்டு 1000 விமானங்கள் ரத்து செய்யப்பட்டன.

அதேபோல் சாலைகளிலும், ரெயில் வழித்தடங்களிலும் பனித்துகள்கள் மலைகுவியல் போல் குவிந்ததால் சாலை மற்றும் ரெயில் போக்குவரத்து பாதிக்கப்பட்டது. நேற்று முன்தினம் புதன்கிழமை ஒரேநாளில் அதிகபட்சமாக மாசாசூட்சின் பாஸ்டன் நகரில் 20 செ.மீ அளவுக்கு பனிப்பொழிவு ஏற்பட்டதாக தேசிய வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

முன்னதாக பனிப்புயல் காரணமாக பள்ளிகளுக்கு விடுமுறை அறிவிக்கப்பட்டு ஆன்லைன் வகுப்புகள் நடத்தப்படும் என அறிவிக்கப்பட்டது. இருப்பினும் பென்சில்வேனியா மாகாணத்தில் நிலவிய கடுமையான பனிப்புயல் காரணமாக மின்சார வினியோகம் பாதிக்கப்பட்டது. இதனால் 2 லட்சத்திற்கு அதிகமானோர் வீடுகளில் மின்சாரம் தடைப்பட்டது. இதனால் பள்ளி மாணவர்களின் ஆன்லைன் வகுப்புகள் ரத்தாகின. பொதுமக்களின் இயல்புவாழ்க்கை முடங்கியது.

பயங்கர பனிப்புயல் காரணமாக மாகாணங்களின் பல்வேறு இடங்களில் சாலை விபத்துகள் ஏற்பட்டன. இதில் பலர் படுகாயம் அடைந்தனர். இந்தநிலையில் வரும் நாட்களில் பனிப்பொழிவு நீடிக்க வாய்ப்புள்ளதாக வானிலை ஆய்வு மையம் அறிவித்துள்ளது. இதனால் அவசியமின்றி பொதுமக்கள் வெளியே நடமாடுவதற்கு நியூயார்க் உள்ளிட்ட மாகாணங்கள் தடை விதித்துள்ளன.

# அமெரிக்காவுக்கு அனுப்புவோம் என கூறி கடத்தல்காரர்களிடம் சிக்கி தவித்த இந்தியர்கள்

**காத்மண்டு : பிப். 16,**

**ஆள் கடத்தல் சம்பவத்தில் தொடர்புடைய, ஏஜெண்டுகளாக செயல்பட்ட 7 பேரை போலீசார் கைது செய்தனர்.**

இந்தியாவின் பல்வேறு பகுதிகளை சேர்ந்தவர்கள் வேலைதேடி சில ஏஜெண்டுகள் வழியே வெளிநாடுகளுக்கு செல்லும் வழக்கம் கொண்டுள்ளனர். இதற்காக செலவிடும் தொகை குறைவாக இருக்கும் என நம்பி அதனை தேர்ந்தெடுக்கின்றனர்.

இந்நிலையில், பஞ்சாப் மற்றும் அரியானா ஆகிய மாநிலங்களை சேர்ந்த சிலர் வெளிநாட்டுக்கு சென்று வேலையில் சேருவது என முடிவுசெய்துள்ளனர். அவர்கள் ஏஜெண்டுகளை சந்தித்து ரூ.45 லட்சம் வரை பணம் கொடுத்துள்ளனர். இதன்படி, அவர்களை அமெரிக்காவுக்கு அனுப்பி வைப்போம் என்று ஏஜெண்டுகள் கூறியுள்ளனர்.

சட்டவிரோத வகையிலான இந்த பயணத்திற்கு நேபாள நாட்டின் வழியே அவர்கள் அழைத்து செல்லப்பட்டு உள்ளனர். ஆனால், ஒரு மாதம் ஆகியும் அமெரிக்காவுக்கு கொண்டு செல்லப்படாமல் நேபாளத்திலேயே வீடு ஒன்றில் அடைத்து வைக்கப்பட்டு உள்ளனர். இதுபற்றிய ரகசிய தகவல் அறிந்து, காத்மண்டு நகரில் ரதோபுல் பகுதியில் உள்ள வீட்டில் இருந்த 11 இந்தியர்களை போலீசார் மீட்டனர். அவர்கள் அனைவரும் ஆண்கள் என போலீசார் தெரிவித்தனர்.

இந்த சம்பவத்தில் தொடர்புடைய ஏஜெண்டுகளாக செயல்பட்ட 7 பேரையும் போலீசார் கைது செய்தனர். அவர்கள், வெளிநாடுகளுக்கு ஆட்களை அனுப்புகிறோம் என கூறி ஆள்கடத்தலில் ஈடுபட்டது தெரிய வந்துள்ளது. இந்தியர்களை சொந்த நாட்டுக்கு கொண்டு வரும் பணி மற்றும் போலீசாரின் விசாரணை தொடர்ந்து நடந்து வருகிறது. வேறு யாரும் அந்த பகுதியில் இதுபோன்ற ஆள்கடத்தல் சம்பவத்தில் ஈடுபடுகிறார்களா? என்றும் போலீசார் விசாரித்து வருகின்றனர்.

# தேர்தல் பத்திரம் சட்டவிரோதமானது உச்ச நீதிமன்றம் பரபரப்பு தீர்ப்பு





# மதுரை சுங்கச்சாவடி அருகே பாஜக நிர்வாகி ஓட ஓட வெட்டிக் கொலை

# முதல்வர் வீட்டின் அருகே பயங்கரம் மாமூல் கேட்டு பிரியாணி கடையைச் சூறையாடிய ரவுடிகள்




| சென்னை / புதுக்கோட்டை | 16.02.2024 | varalaruu.com | பக்கம்:6 | ரூ.10 |
|---|---|---|---|---|

புதுகை வரலாறு நாளிதழ்

16.02.2024 வெள்ளி

# வரலாற்றில் இன்று



## இன்றைய பிறந்த நாள்

கிருஷ்ணதேவராயன் , விஜயநகரப் பேரரசர் (பி.1471) (இ.1529)



கொல்வின் ஆர். டி சில்வா , இலங்கை இடதுசாரி அரசியல்வாதி (பி.1907) (இ.1989)



தெளிவத்தை ஜோசப் , ஈழத்து எழுத்தாளர் (பி.1934) (இ.2022)



இல. கணேசன் , தமிழக அரசியல்வாதி (பி.1945)



## இன்றைய நினைவு நாள்

தாதாசாகெப் பால்கே , இந்தியத் திரைப்பட இயக்குநர், தயாரிப்பாளர் (பி.1870) (இ.1944)



டி. கே. சிதம்பரநாத முதலியார் , தமிழக எழுத்தாளர், வழக்கறிஞர் (பி.1882) (இ.1954)



மேகநாத சாகா , இந்திய வானியற்பியலாளர் (பி.1893) (இ.1956)

